தமிழ் பேசும் மாணவர்களின் தேசிய குரலாய்



# மாணவர் குரல்

குரல் 01
நன்கொடை 30.00 ரூபா
அடிமை வருடம் 2013 ஜீன் 14 – ஜீலை 14
திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடவை(ஆனி) மாதம்

## அரச படைகளின் அராஜகத்தின் மத்தியிலும் சப்ரகமுவ பல்கலை மாணவர்கள் தொடர் போராட்டம்



சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின் மீது தாக்குதல் நடத்தும் அரசபடைகள்

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் நிர்வாகத்தினால் மாணவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகளை எதிர்த்து மாணவர்கள் தொடர் போராட்டம் நடத்திவருகின்றனர். மாணவர் ஒன்றியம் மற்றும் ஐந்து மாணவர்கள் மீதான வகுப்பு தடையை நீக்க கோரி மூன்று மாதகாலமாக சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் போரடி வருகின்றனர். இதன் உச்சகட்டமாக கடந்த வை-காசி 18 அன்று (ஜீன் 1) மாணவர்கள் நடத்திய ஆர்பாட்த்தின் மீது ஸ்ரீலங்கா பொலிசார் கண்ணீர் புகை தாக்குதல் நடத்தி தடியடி பிரயோகம் மேற்க்கொண்டனர். இதன்போது அறுபதிற்கும் அதிகமான மாணவர்கள் காயங்களுக்கு ஆளாகி சிகிச்சை பெற்றனர். ஏராளமானோர் சிறிய அடிக்காயங்களுக்குள்ளாகினர். ஆர்பாட்டத்தில் நின்ற பெண் மாணவர்கள் மீதும் பொலிசார் காடைதனமான தாக்கதல் மேற்கொண்டனர். சம்பவத்தின் போது வவுனியாவினை சேர்ந்த மாணவி ஒருவர் ஒரு காட்டுமிராண்டி பொலிசுக-ாரனின் தாக்குதலினால் அவ்விடத்திலே விழுந்தார். மேலும் பத்திற்கும் அதிகமான மாணவர்களை பொலிசார் 2

## பாலியல் தொந்தரவு கொடுக்கும் விரிவுரையாளர்கள் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்பார்ப்பாட்டம்

யாழ்பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் சிலர் மாணவிகளுக்கு பாலியல் ரீதியான தொல்லைகள் கொடுப்பதினை அம்பலபடுத்தியும் எதிர்த்தும் கடந்த வைகாசி 16 ம் திகதி (மே 30) அன்று பல்கலைக்கழக வளாகத்தினுள் ஆர்ப்பாட்டம் ஒள்றினை நடத்தினர். இதன் போது கொடும்பாவி எரிக்கப்பட்டதோடு ஒழுக்ககேடான விரிவுரையாளர்களை துரத்தியடிக்க கோரும் பதாகைகளையும் மாணவர்கள் ஏந்தி நின்றனர். மாணவர் ஒன்றியம் போதுமான ஆதாரங்களை வழங்கியும் நிர்வாகம் நடவடிக்கை எடுக்காது அசமந்தபோக்கை கடைபிடிப்பதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். பல்கலைக்கழகங்களினுள் சில விரிவுரையாளர்கள் நிர்பந்தங்களை விதித்து மாணவிகள் மீதான பாலியல் சுரண்டல் மேற்கொள்வது நடந்து வருகிறது. தமிழீழ விடுதலை புலிகள் இருந்த காலத்தில் இவ்வாறான நபர்களை எச்சரித்து நிலைமையை கட்டுபாட்டிற்குள் வைத்திருந்தனர். ஆனால், யுத்தம் முடிந்த பின் சில விரிவுரையாளர்கள் தங்களது கீழ்தரமான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். நீண்ட காலமாக சில விரிவுரையாளர்கள் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்த போதிலும், பாதிக்கப்பட்ட மாணவி ஒருவர் தைரியமாக கொடுத்த முறைப்பாட்டினை தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அம்பலத்திற்கு வந்தன. இதனை தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டவர்களில் விரிவுரையாளர் ஒருவர் வகித்து வந்த துறைதலைவர் பதவி நிர்வாகத்தினரால் பறிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன் யாழ்பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினால் கலாசார சீரழிவில் ஈடுபடும் விரிவுரையாளர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இந்த சுவரொட்டிகளில் கலைபீடத்தின் பொருளியல் துறை பேராசிரியர் சி.இளங்குமரன், தமிழ் துறை தலைவர் பேராசிரியர் கே.விசாகரூபன், தமிழ் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.அருந்தாகரன், இராமநாதன் நுண்கலைத்துறை நிறுவகத்தின் இசைத்துறை 2




80 களில் யாழ்பல்கலைக்கழகத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்று. சுவரொட்டி இன்று இல்லை சுவரொட்டிகள் சுமந்து நின்ற வரிகள் இன்றும் !!!

## நியமனங்களில் அரசியல் தலையீடுகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விசனம்

பல்கலைக்கழகங்களின் உயர்பதவிக்கான நியமனங்களில் அதிகரித்த அரசியல் தலையீடுகள் பல்கலைக்கழகங்களில் குழப்ப நிலைகளையும் சீர்குழைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன என விரிவுரையாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். குறிப்பாக உபவேந்தரை நியமிக்கும் அதிக-ாரம் சனாதிபதியிடம் இருக்கும் நிலையில் நியமனங்களில் தகைமைக்கும் திறமைக்கும் பதில-ாக அரசியல் நலன்களே கருத்தில் கொள்ளபப்படுகிறது. உபவேந்தர் நியமனங்களின் போது குறித்த பல்கலைக்கழக பேரவையினால் வாக்கெடுப்பு மூலம் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டு சனாதிபதிக்கு பெயர் விபரம் அனுப்பப்படும். சனாதிபதியே மூன்று பேரிலிருந்து உபவேந்தரை நியமிப்பார். இந்நியமனங்களின் போது எப்போதும் குறைந்த வாக்குகளை பெற்றவரே நியமிக்கபடுவதனை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக மிககுறைந்த வாக்குகளை பெற்றாலும் தகுதி அடிப்படையில் கீழிருந்தாலும், அரசியல் செல்வாக்குள்ளவர்கள் அல்லது அரசாங்கத்திற்கு ஒத்து ஊதுபவர்களுக்கு நியமனம் வழங்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட உபவேந்தர் இவ்வாறே நியமிக்கப்பட்டதாக கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளதோடு அவருக்கு ஒத்துழைப்பு வழங்க போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். இதே போன்ற சிக்கல் நிலை கிழக்கு பல்கலைக்கழகத்திலும் நிலவுகிறது. யாழ் பல்கலைக்கழகத்தின் தற்போதைய உபவேந்தரை விட அதிக ஆதரவை பெற்ற பேராசிரியர் ஹீல் அவர்களுக்கான நியமனத்தை வழங்கி, அவருக்கு சனாதிபதி விருந்துபராசத்தினையும் வழங்கி முடிந்த பின் அமைச்சர் 2

தமிழ் மாணவர்களின் போராட்டம் சொல் வழியும் செயல் வழியும் 6
இலவச கல்வியையும் கல்விச் சுதந்திரத்தையும் வென்றெடுப்போம் ! 7
ஒடுங்கி, ஒதுங்கி வாழ்வதா மாணவர் இயல்பு! 4

# அரச படைகளின் அராஜகம்... (தொடர்ச்சி)

அடித்து தரதரவென்று இழுத்துசென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றி அழைத்து சென்றனர். பிறகு கைது செய்ததாக ஊடகங்கள் மூலம் அறிவித்தனர். இத்தனை நடந்தும் மாணவர்கள் போராட்டங்களை கைவிடோம் என்று அறிவித்து, தங்கள் போராட்டத்தினை தைரியத்துடன் முன்னெடுத்தனர். சக பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிசார் நடத்திய காட்டுமிராண்டி தாக்குதலினை கேள்வியுற்று கொதித்தெழுந்த பேராதனை, றுகுனு,ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர்கள் ஆயிரக்கணக்கில் வீதியில் இறங்கி ஆர்பாட்டம் நடத்தினர்.நிலைமை கட்டுக்கடங்காமல் கைமீறி செல்வதை உணர்ந்த சப்ரகமுவ பல்கலைக்கழக நிர்வாகம் கொஞ்சம் இறங்கி வந்து வகுப்புதடை விதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பரீட்சை எழுத அனுமதி அளித்தது.

கடந்த பங்குனி 2 ம் திகதி (மார்ச் 15) அன்று மாணவர் ஒன்றியம் மீது தடை விதிக்கப்பட்டது, அதனை தொடர்ந்து பங்குனி 4 (மார்ச் 17) ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் 5 மாணவர்களுக்கு வகுப்பு தடை விதிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விடுதி கட்டடத்தையும் மைதானத்தினையும் திறந்து வைப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயளாலர் கோட்டபாய ராஜபக்சவும் உயர் கல்வி அமைச்சர் திசாநாயக்கவும் வரவிருந்தனர். இவர்கள் இருவரும் திறப்பு விழாவிற்காக பல்கலைக்கழகத்திற்குள் வருவதினை எதிர்த்த மாணவர் ஒன்றியம் அவர்கள் கலந்துகொண்டால் எதிர்ப்புநடவடிக்கைகளை நடத்துவதோடு விழாவினை முற்றாக புறகணிப்போம் என்று அறிவித்தனர். வேறு வழியின்றி திறப்புவிழா கைவிடப்பட்டது. இதனால் மாணவர் ஒன்றியத்தினை பழிதீர்க்க காத்திருந்த நிர்வாகம் ஒன்றியத்தினை தடை செய்ததோடு போலிகுற்றசாட்டின் பெயரில் ஒன்றியத்தின் பிரதான செயற்பாட்டாளர்கள் ஐவர் மீது வகுப்பு தடை விதித்தது.

தடையை நீக்க கோரி நிர்வாகத்துடன் நடத்திய தொடர் பேச்சுவார்த்தை தோல்வியடைய, மாணவர்கள் தடையை நீக்க கோரி பங்குனி 15 ம் திகதி (மார்ச் 28) முதல் வகுப்பு புறகணிப்பு போராட்டதினை ஆரம்பித்தனர். இடையில் பிரதேச மக்கள், ஊடகவியளாளர்கள், தொழிற்சங்கங்களுடன் இயக்கம் ஒன்றினை ஆரம்பித்து அநீதிக்கு எதிராக போராட ஆரம்பித்தனர். சுழற்சி முறையில் நடத்திய தொடர் வகுப்பு புறகணிப்பிற்கு நிர்வகாம் மசியாததினால் அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டிய நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டனர். உபவேந்தரின் அலுவலகத்திற்கு முன்னால் கொட்டில் அமைத்து இடைவிடாத சத்தியாகிரகத்தில் குதித்தார்கள் மாணவர்கள். சத்தியாகிரகத்தின் போது கடந்த வைகாசி 9 ம் திகதி ( மே 23) அன்று நள்ளிரவு ஒரு மணியளவில் பல்கலைக்கழக பிரதன நுழைவாயிலிற்கு அருகில் வெள்ளை வாகனத்தில் வந்த குழுவினர் மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் வானை நோக்கி துப்பாக்கி பிரயோகத்தினை நடத்திவிட்டு சென்றனர். சத்தியாகிரகத்தினை அச்சுறுத்தி அடக்கும் முயற்சியின் பின் பொறுமை இழந்த நான்கு மாணவர்கள் வைகாசி 15 (மே 29) முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் குதித்தனர். தொடர்ந்து நான்கு நாட்களாக உண்ணாவிரதம் இருந்த மாணவர்களின் உடல்நிலை மோசமடைந்ததாலும் நிர்வாகம் கண்டும் காணாமலும் இருந்ததாலும் வெகுண்டெழுந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் செல்லும் பதுளை- கொழும்பு வீதியை இடைமறித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தினையே பொலிசார் காட்டுமிராண்டிதனமான தாக்கி களைத்தனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலை கண்டித்து ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் இறங்கிடவே நிர்வாகம் மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கும் பல்கலைக்கழகத்தினுள் பிரவேசிப்பதற்கும் விதித்திருந்த தடையை நீக்கி நிலைமையயை சமாளித்தது. பரீட்சைகள் நடைபெறுவதினால் போராட்டங்களை தற்காலிகமான இடைநிறுத்திய மாணவர்கள் தொடர்ந்து நீதி நிலைநாட்டப்படும் வரை போராட போவதாக அறிவித்துள்ளனர். சில அரசியல்வாதிகள் தங்கள் அரசியலிற்காக பல்கலைக்கழகங்களை தவறாக பயன்படுத்த முனைவதும், அதற்கு அரசியல்வாதிகளின் அனுசரனையுடன் பதவிக்கு வரும் நிர்வாகத்தினர் துணைபோவதும் கண்டிக்கதக்கதும் மாணவர்களின் கல்விநடவடிக்கையை பாதிக்கதக்கதுமாகும். சம்பந்தபட்டவர்கள் இது போன்ற நடவடிக்கைகளை உடன் நிறுத்திட வேண்டும். இந்தவிடயத்தில் அனைவரும் ஒன்றினைந்து செயற்பட்டு பல்கலைக்கழகங்களையும் உரிமைகளையும் பாதுகாக்க செயற்படுவதும் அவசியமானதாகும்.

கொழும்பு பல்கலைக்கழகத்தினுள் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் காரணமாக மூன்று பீடங்கள் மூன்று தினங்களுக்கு மூடப்பட்டன. பல்கலைக்கழகத்தின் 4 மாணவர்கள் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவரான சட்டபீட மாணவி நிசன்சலா பிரியந்தி கடந்த வைகாசி 16 ம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமடைந்ததை தொடர்ந்து பல்கலைக்கழகத்தினை சுத்தப்படுத்துவதற்காக மூன்று தினங்கள் பல்கலைக்கழகம் மூடப்பட்டது. நிர்வாகத்தின் அசமந்த போக்கின் காரணமாக மேலும் ஒரு மாணவியின் உயிர் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர் ஒருவர் மீது இனம்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். மேற்படி நிறுவகத்தின் மாணவர் ஒன்றிய தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தேர்தலில் போட்டியிடும், மாணவர் ஒருவரே தாக்குதலிற்குள்ளானார். மாணவர்களிடையேயான முன்விரோதமே காரணமாக கூறப்படுகிறது. எது எப்படி இருப்பினும் உயர்ந்த ஜனநாயக பண்பினை வெளிக்காட்டி முன்மாதிரியாக நடக்க வேண்டிய மாணவர்கள் இவ்வாறு நடந்து கொள்வது கவலைக்குரிய விடயமாகும்.

வைகாசி 16 அன்று இரவு 9.00 மணியளவில் றுகுனு பல்கலைக்கழக மாணவர் விடுதியினுள் அத்துமீறி நுழைந்த நபர்களினால் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களின் 3 பேர் அதே பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஆவர். அரசாங்க தரப்பு ஆதரவுடைய சிறிய அளவிலான மாணவர் குழுவினர் புலனாய்வுதுறையினர்,குண்டர்களுடன் இணைந்து பல்கலைக்கழகங்களில் குழப்பம் விளைவிக்கும் நோக்கில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

கடந்த வைகாசி 24 ஆம் திகதி நள்ளிரவு வேளையில் களனி பல்கலைக்கழக மாணவர் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்த குழுவினர் சில மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி மாணவர்களின் உந்துரொளிகள் மடிக்கணனிகள் என்பவற்றை சேதப்படுத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் இரண்டு வாகனங்களில் வந்ததாகவும், வந்தவர்கள் மாணவர்களின் பணத்தை அபகரித்து சென்றதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர். இச்சம்பவத்துடன் குறிப்பிட்ட மாணவர் குழுவொன்றிற்கும் தொடர்பு இருப்பதாகவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வைகாசி 26 ம் திகதி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்கள் 21 பேரிற்கு வகுப்பு தடை விதிக்கப்பட்ள்ளது. தனியார் மருத்து கல்லூரிகளை மூடுமாறு வலியுறுத்தி அமைதியான ஆர்பாட்டம் நடத்தியதன் காரணமாகவே இவ்வகுப்பு தடை விதிக்கப்பட்டுள்ளது. 1991 இலிருந்து 22 வருடங்களுக்கு பின் ஜபுர மருத்துவ பீட மாணவர்களுக்கு வகுப்புதடை விதிக்கப்பட்ட முதல் சம்பவம் இதுவாகும். தனியார் பல்கலைக்கழகங்களிற்கு எதிரான மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை கடும்கரம் கொண்டு அடக்கிவருவது குறிப்பிடதக்கது.

# நியமனங்களில் அரசியல் தலையீடுகள்... (தொடர்ச்சி)

டக்லஸ் தேவானந்தாவின் தலையீட்டினால் மறு தினமே தற்போதைய உபவேந்தரும் டக்லஸ் தேவாநந்தாவின் ஆதரவாளருமான வசந்தி அரசரட்னம் அவர்கள் நியமிக்கப்பட்டதும் குறிப்பிட தக்கது. பேராதனை பல்கலைக்கழகத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கும் பிரதி உபவேந்தரின் நியமனத்தினை எதிர்த்து பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் அண்மையில் நடந்த பட்டமளிப்பு விழாவினை புறகணித்திருந்தார்கள். இதனை விட பல்கலைக்கழக பதிவாளர் உட்பட காரியாலய பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்து பல்கலைக்கழகங்களில் இராணுவ அரசியல் தலையீட்டை அதிகரித்து, குழப்ப நிலைகளை தோற்றுவித்திருக்கின்றது அரசாங்கம். பல்கலைக்கழகங்களில் இவ்வாறான குழப்பகரமான நிலை நிலவுவானது அதன் செயற்பாட்டையும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளையும் நேரடியாக பாதிக்க செய்யும். இவ்வாறான குழப்பநிலைகளை சீர் செய்வதும் பல்கலைக்கழகங்களில் அரசியல் தலையீட்டை நிறுத்தி பதவி நியமனங்களில் தகுதியையும் திறமையையும் கருத்தில் கொள்ள வேண்டியதும் அதனை வலியுறுத்த வேண்டியதும் மிக அவசியமானதாகும்.

# பாலியல் தொந்தரவு கொடுக்கும்...

தலைவர் கலாநிதி என்.வி.எம்.நவரத்னம் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்ததோடு, மேற்குறிப்பிட்டவர்களில் பொருளியல் துறை தலைவர் பேராசிரியர் சி.இளங்குமரனின் துறைதலைவர் பதவி குறிப்பிட்ட குற்றசாட்டுகளின் பிரகாரம் பறிக்கப்பட்மையும் குறிப்பிடதக்கது.

இதே வேளை மாணவர் ஒன்றியம் இவ்வாறான சீரழிவு நடவடிக்கைகளுக்கு எதிராக நிற்பதோடு இவ்வாறானவர்களை அம்பலபடுத்தவும் செய்வதோடு பாலியல் தொல்லை தரும் விரிவுரையாளர்கள் மீது 25 குற்றசாட்டுக்களையும் முன்வைத்துள்ளது.

*–மாணவிகளிடம் தொலைபேசி எண் தருமாறு வற்புறுத்தல், பெண்களை தனியாக அறைக்கு வருமாறு கூப்பிடுதல், பரீட்சை வினாத்தாள்கள் எடுப்பதற்கு ஒவ்வொரு மாணவியையும் தனித்தனியாக வரவேண்டும் என வற்புறுத்துகின்றமை,*

*–தொலைபேசி எண்ணைப் பெற்றுக் கொண்டு குறுந்தகவல் அனுப்பியமை, தனக்கு எதிராக செயற்படுபவர்களை காட்டித்தருமாறு வற்புறுத்தியமை, தன்னுடைய பாடத்தை எடுக்குமாறு கட்டாயப்படுத்தியமை, இதனோடு பரீட்சை வினாத்தாளில் பெயர் எழுதும்படி வற்புறுத்தியமை,*

*–குறைந்த புள்ளி எடுப்பவர்களைத் தனது பிரத்தியேக அறையில் வந்து சந்திக்கும்படியும் சந்தித்தால் மட்டுமே புள்ளி வழங்குவேன் என்றும் கூறியமை, தனது பிரத்தியேக அறைக்கு 2 மணிக்குப் பின்னர் தனியாக வந்து சந்திக்க கூறுகின்றமை,*

*–தன் செயற்பாடுகளுக்கு உடன்பட்டால் தான் நல்ல புள்ளிகளை வழங்குவேன் என அச்சுறுத்துகின்றமை, தனது பாடத்தை எடுக்காத மாணவர்களுக்கு இறுதியாக புள்ளிச் சான்றிதழ் வழங்கும் போது இது முழுமையான பட்டம் அல்ல என எழுதி விடுவேன் எனப் பயமுறுத்தியமை,*

*–துணைப்பாடமாகத் தனது பாடத்தை எடுக்காத மாணவர்களுக்குத் தற்காலிக விரிவுரையாளர் பதவியை வழங்க மாட்டேன் எனக் கூறியமை, துணைப் பாடத்தினை வேறு துறைகளிலோ வேறு பாடங்களிலோ எடுக்க கூடாது என வற்புறுத்துகின்றமை,*

*–தனியாக சந்திக்கும் மாணவிகளிடம் பரீட்சை விடைத் தாள்களின் பின்னர் வெற்றுத் தாளைகளைச் சேர்த்துக் கட்டுமாறு தனக்கு இசைவாக நடக்கும் பட்சத்தில் உயர்ந்த புள்ளிகளை வழங்குவதற்கு வாய்ப்பாக அமையும் என்று கூறியமை.*

*–தொலைபேசி எண் கேட்டபோது தொலைபேசி இல்லை எனப் பதில் கூறியமைக்கு புதிய தொலை பேசி வாங்கித்தரவா? எனக் கேட்டமை, தொலை பேசி எண்களுக்கு குறுந்தகவல் அனுப்பியபோது அதற்கு பதிலிக்காத மாணவிகளை அறைக்குள் அழைத்து மிரட்டியதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.*

*–அனைத்து மாணவிகளுடைய விபரங்களையும் (முகவரி உட்பட) அனைத்து விடயங்களையும் பதிவாளர் அறையில் சென்று பெறுவேன் என மிரட்டியமை, தனக்கு இசைவாகாத எந்தவொரு மாணவியையும் சிறப்புக் கலைப் பாடத்திலிருந்து பொதுக்கலைப் பாடமாக மாற்றி வெளியேற்றுவேன் என கூறுகின்றமை,*

*–தொலைபேசி எண் கேட்டுக் கொடுக்காத பெண் பிள்ளைகளுக்கு இறுதிப் பரீட்சைக்கு கையொப்பம் இடமாட்டேன் என்று மறுத்துள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.*

*–வகுப்பறையில் பரீட்சையில் குறைந்த புள்ளி எடுத்த ஆண் மாணவர்களை ரியூட்டோரியல் எழுதித் தரும்படியும் பெண் பிள்ளைகளைத் தனித்தனியாக தனது அறையில் சந்திக்கும்படியும் கூறியமை,*

*–அவருக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட போது அதற்குக் காரணம் பொருளியல்துறை மாணவிகளே எனக் கூறி அதற்காகவே முதலாம் பருவ* Mathematics Paper *பரீட்சையை மிகக் கடினமாகப் போட்டேன் என வகுப்பறையில் கூறியதாக மாணவர்கள் தெரிவித்தமை.*

*–தான் கூறும் விடயங்களை வெளியில் கூறக் கூடாது என்றும் அப்படிக் கூறும் பட்சத்தில் நீங்கள் எப்படி சித்தியடைந்து போவீர்கள் என்பதைப் பார்த்துக் கொள்கிறேன் எனவும் வகுப்பில் கூறியமை,*

*–பீடாதிபதிக்கோ ஏனையோர்களுக்கோ தான் கட்டுப்பட மாட்டேன் என்றும் ஏனைய விவுரையாளர்களைக் கூடப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் தனக்கு இருக்கிறது என்றும் அதற்கேற்ப மாணவர்களை நடந்து கொள்ளும்படியும் கூறியமை.*


இவ்வாறான விரிவுரையாளர்கள் எம் சமூகத்திற்கே இழுக்கானவர்கள். இவர்கள் மீது உடன் விசாரனை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இவர்களின் பேராசிரியர், கலாநிதி பட்டங்கள் மீள பறிக்கப்படுவதோடு வேறெங்கும் ஆசிரியராக கடமையாற்ற முடியாத வண்ணம் தடைவிதிக்க வேண்டும். பல்கலைக்கழகங்களில் முறைகேடுகளில் ஈடுபடும் இவ்வாறானவர்கள் தொடர்பாக சமூகத்திற்கு அம்பலபடுத்தல் வேண்டும். மாணவர்குரல் தொடர்ந்து இவ்வாறானவர்களை அம்பலபடுத்திட தயாராக உள்ளது.

# முன்னாள் மாணவர் ஒன்றிய செயலாளர் வீட்டின் மீது கல்வீச்சு



யாழ்பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றிய செயலாளர் பரமலிங்கம் தர்ஷனாந் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் கல்வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளனர். கடந்த மே மாதம் மாலை 7.30 மணியளவில் யாழ்பாணம் பிரவுன் வீதியில் அமைந்துள்ள தர்சனாந்தின் வீட்டின் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏலவே, தர்சனாந் மீது அரச படைகளினால் கடந்தவருடம் மே மாதம் மிலேச்சதனமான தாக்குதல் நடத்தப்பட்டதோடு, நவம்பர் மாதம் அரசபடைகளினால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு என்ற பெயரில் சில காலம் அடைத்து வைக்கபட்டிருந்தார் என்பதும் குறிப்பிடதக்கது.

இளைஞர்கள் அரசியலுக்கு வர தயங்கும் தற்போதைய சூழலில் பல்கலைக்கழக மாணவர் இயக்கத்திலும் அதற்கு வெளியிலும் ஆக்கபூர்வமான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் இளைஞரான தர்சனாந்தை அச்சுறுத்தி முடக்கும் நோக்கிலேயே, தமிழ் இளைஞர்கள் தங்கள் உரிமைக்காக ஆக்கபூர்வமான அரசியலில் ஈடுபடுவதினை பொறுக்க முடியாத தீய சக்திகளினாலே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. சமூக பொறுப்பை சுமக்க முன்வரும் தர்சனாந் போன்ற



தைரியமான இளைஞர்களை தட்டி கொடுக்க வேண்டியதும் அவ்வாறான இளைஞர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கடுமையாக எதிர்க்க வேண்டியதும் அனைவரினதும் கடமையாகும்.

மாணவர் குரல்

தமிழ் பேசும் மாணவர்களின் குரலாய் தமிழ் மாதத்தின் முதல் தினம் தோறும் தமிழ் மாணவர் செயற்குழுவினால் வெளியிடப்படும் மாத இதழ்
தொடர்புகளுக்கு 0777826814
மின்னஞ்சல் editor.maanavarkural@gmail.com
முகபுத்தகத்தில் www.facebook.com/maanavarkural
திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடவை மாதம்

# நாம் பேச வேண்டும்! எழுத வேண்டும்! நாம் வாழ வேண்டும்!

உலகில் வாழும் எந்தவொரு சிறு உயிரினமும் தான் வாழும் சூழலில் போராடி தான் உயிர்வாழ வேண்டும். போராடினால் தான் உயிர்வாழமுடியும். இது இயற்கை விதி. உலக பொது நியதி. எம் வாழ்விற்கும் இருத்தலிற்கும் அச்சுறுத்தல் ஏற்படும் போதெல்லாம் போராடினால் தான் நிலைக்க முடியும். அப்படி தான் உயிர்வாழ்வதற்கும் உரிமைக்கும் அச்சுறுத்தல், உத்தரவாதமற்ற நிலை தோன்றிய போது தமிழினம் போராடியது. இன்றும் போராடினால் தான் பிழைக்க முடியும் என்ற சூழலில் வாழ்கின்றோம். மக்கள் விரோத சக்திகளுக்கும் ஒடுக்குமுறையாளர்களுக்கும் எதிராக போராட வேண்டியதொரு சூழலில் எம் தேசியம் நிற்கும் நிலைமையில், மாணவர்களாகிய எமக்கும் அதில் முக்கியமானதொரு பாகம் இருக்கின்றது. விடுதலை போராட்ட அமைப்புக்கள், இயக்கங்கள், விடுதலை வேண்டிய கட்சிகள் எல்லாம் ஒன்றில் மௌனமாகி வெற்றிடத்தை உருவாக்கிவிட்ட நிலையில், அல்லது விலைபோய் விடுதலையை அடமானம் வைத்து கோவணம் இழந்துள்ள நிலையில், எம் தேசியத்தின் ஒட்டுமொத்த விடுதலை வேட்கையையும் தோள்களில் சுமக்க வேண்டிய பொறுப்பு என்றும் போல் மாணவர்களாகிய எம்முன் இருக்கும் நிலையில் அந்த சுமையை எம் தோள்களில் சுமக்க வேண்டியவர்களாகின்றோம். அந்த சுமையின் கனதியை சுமக்கும் வலு மாணவர்களாகிய எமக்கிருக்கின்றது. அதற்காக நாம் ஒன்றினைய வேண்டும். எம் தேசியத்தின் இடர் நீக்க நாம் குரல் கொடுக்க வேண்டும், எழுத வேண்டும் அதன் வழி இயங்க வேண்டும். அதற்கோர் தடம் தேவை. அந்த தடமாக உறுதியுடன் உணர்வுடன் தைரியமாய் தன்னம்பிக்கையுடன் மாணவர் குரலை வெளிக்கொண்டு வந்திருக்கின்றோம்.

**‘ பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்**
**விண்டுஉமி போனால் முளையாதாம் – கொண்ட பேர்**
**ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி**
**ஏற்ற கருமம் செயல்’**

என்பது ஔவையார் அருளிய வாக்காகும். அது எமக்கும் பொருந்தும். உமி நீங்குவதற்கு முன்னர் முளைப்பது என்னவோ அரிசி தான் ஆனால் உமி நீங்கிப்போனால் அவ்வரிசி முளைக்காது. அதுபோல, எத்தகைய பெரிய வல்லமை உடையவர்க்கும் காவல் வலிமையின்றி, எடுத்துக்கொண்ட செயலைச் செய்து முடித்தல் இயலாது. மனிதன் மண்ணின் மைந்தன் ஆனதால், அவனுடைய முதல் காவல் வலிமை அவனது தேசமாகும். விடுதலை வேட்கையை அடைய தேசத்தினை காத்திட வேண்டும். தேசம் என்பது வெறும் மண்ணும் மரமும் செடியும் கொடியுமல்ல. ஓர் தேசத்தினை ஆக்குவது அவ் தேச மக்களின் பண்பாடும், மொழியும், பொருளாதாரமும் அவை இயங்கும் நிலமும் இணைந்தாகும். தேசிய விடுதலை என்பது விரோதிகளிடமிருந்து மண்ணை மீட்பது மட்டுமல்ல. எம் தேசத்தினை ஆக்கும் அத்தனை கூறுகளையும் காத்திடவேண்டும். நிலம் இன்று ஒடுக்குமுறையாளர்களினால் அபகரிக்கப்பட்டு கொண்டிருக்க, அவர்களுக்கு அதிக வேலையும் சிரமமும் கொடுக்காமல் மொழியையும் பண்பாட்டினையும் நாமே அழித்து கொண்டிருக்கின்றோம். தொடர் நிலபரப்பில் பண்பாடும் மொழியும் இணைந்து மக்களிடையே ஒத்த மனபாங்கினையும் ஒத்த வாழ்க்கை போக்கினையும் தோற்றுவிக்காது விடின் தேசிய பொருளாதாரம் உருவாகாது, தேசம் எழாது. எனவே எம் தேசத்தினை காத்திட வேண்டுமென்றால் எம் மொழியையும் பண்பாட்டையும் காத்திட வேண்டும் வளர்த்திட வேண்டும் நவீனங்களை உள்வாங்கி முன்னேற்றிட வேண்டும். அதற்கு எம்முள் ஓர் அசைவியக்கம் தேவை. அப்படியானதொரு அசைவியக்கமே எம் தேசியத்தினை எழுச்சியடைய செய்யும். எம் தேச எழுச்சிக்காக குரல் எழுப்புவோம், எழுதிடுவோம், இயங்கிடுவோம். ஆம் அதற்கு தான் குரல் எம் தேசத்தினை எழுப்பிடும் குரலாய் மாணவர்குரல். எம் தேசம் எழுச்சியடைய

**நாம் பேசிடுவோம் ! நாம் எழுதிடுவோம் ! நாம் வாழ்ந்திடுவோம் !**

## உங்களுடன் ஒரு நிமிடம்...

மாணவர் குரல் இதழ் இலாபநோக்கமற்ற முறையில் தமிழ் மாணவர் செயற்குழுவின் தோழர்களின் அர்பணிப்பினாலும், தன்னார்வ பணியினாலுமே வெளிக்கொண்டு வரப்படுகிறது. முதல் இதழிற்காய் தமிழ்தேசியத்தின் நலன்விரும்பிகள் உவகையுடன் நிதியுதவி செய்தனர். அவர்களை நன்றியுடன் நினைவு கூறும் அதே வேளை, மாணவர்குரலினை தொடர்ச்சியாக வெற்றிகரமான முறையில் வெளிக்கொண்டு வர தங்கள் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். எனவே மாணவர் குரலின் சந்தாதாரர் ஆகியோ, அல்லது மாதாந்தம் 30ரூபாய் நன்கொடை செலுத்தியோ மாணவர் குரல் இதழினை வாங்கி படித்து எமக்கு கரம் கொடுக்க வேண்டும். மேலும் களம் மறுக்கப்பட்ட அனைவருக்கும் களம் வழங்கிட நாம் தயாராய் இருக்கின்றோம். அரசியல்,ஆன்மீகம்,கலை,இலக்கியம்,இதர பொதுவான விடயங்கள் என எந்த பரப்பிலும் நின்று எழுதி உள்ளக்கிடக்கையில் பொதிந்துள்ளவற்றை வெளிக்கொண்டு வாருங்கள். மேலும் உங்கள் பாடசாலை பல்கலைக்கழக நிகழ்வுகளையும் எமக்கு அனுப்பினால் பிரசுரிக்க தயாராய் இருக்கின்றோம். ஆக்கங்களை அனுப்பிட அழைப்பேசி மூலமோ மின்னஞ்சல் மூலமோ தொடர்புகொள்ளுங்கள்.

மாணவர்குரல் இதழினை தொடர்ந்து வீட்டிற்கே வரவழைத்திட சந்தாதாரர் ஆகிடுங்குள்.

**ஆண்டு சந்தா 300.00 ருபா**

0777826814 என்ற இலக்கத்திற்கு பணத்தினை **dialog easycash** செய்து பெயர் முகவரியை **maamavarkural-ez** என்று தட்டச்சு செய்து குறுந்தகவலில் அனுப்பியோ அல்லது **MAANAVAR KURAL** என்று தட்டச்சு செய்து குறுந்தகவல் அனுப்பி மேலதிக விபரங்களை பெற்றோ சந்தாதாரர் ஆகிடுங்கள்.

# அடக்கிட துடிக்கும் அரசாங்கமும் அடங்க மறுக்கும் மாணவர் இயக்கமும்



கடந்த எட்டு வருடங்களாக நாடு சென்று கொண்டிருக்கும் பாதை கவலைக்குரியதாக இருக்கின்றது. தவ தராண்மைவாத (**Neo – liberalism**) பொருளாதரம் தீவிரமாக நடைமுறைபடுத்தப்படுகின்றது. இந்த பொருளாதார கொள்கையின் பிரதான இயல்பான தனியார் மயமாக்கம் எல்லா துறைகளிலும் பரவி வருகின்றது. குறிப்பாக இலங்கையில் நடைமுறையில் இருக்கும் இலவச கல்வியை தனியார் மயமாக்கும் முயற்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. அதன் பிரதிபலன்களை பெற்றோர்கள் இன்று உணர ஆரம்பித்திருக்கின்றார்கள். அதேவேளை இலவச கல்வியை தனியார் மயமாக்கும் முயற்சிக்கு எதிரான போராட்டங்களும் தீவிரமடைந்து வருகின்றன. குறிப்பாக இந்த விடயத்தில் மாணவர்களும் விரிவுரையாளர்களும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் ஒன்றினைந்து போராடும் சூழல் உருவெடுத்திருக்கின்றது.

இதற்கெதிராக பல்கலைக்கழக நாட்டின் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அடக்குமுறைகளும் வன்முறைகளும் உச்ச கட்டத்தினை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. இரண்டு காரணங்களின் அடிப்படையிலேயே இந்த அடக்கு முறைகள் அரங்கேறுகின்றன. முதலாவது, கல்வியை தனியார் மயப்படுத்தும் முயற்சிக்கு எதிரான மாணவர் போராட்டங்களையும் அதற்கு தலைமைதுவம் வழங்கும் மாணவர் தலைவர்களையும் முளையிலேயே முடக்குவது. இரண்டாவது, வடகிழக்கில் பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறையாகும். தமிழ் இளைஞர் யுவதிகளின் ஆயுதபோராட்டம் முறியடிக்கப்பட்ட பின், தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைக்கும் இனஅழிப்பு நடவடிக்கைக்கும் எதிராக புரட்சிகரமான போராட்ட குணமிக்க குரல்கள் எழுச்சியடைவதினை பேரினவாதிகளின் அரசாங்கம் விரும்பவில்லை. இதனை முளையிலேயே கிள்ளி எறியும் முனைப்புடன் அரசாங்கம் செயற்படுகின்றது. அதன் காரணமாக யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகளை கண்ணில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு அவதானிக்கும் அரசாங்கம் அவர்களின் மீது அளவு கடந்த அடக்குமுறையை கட்டவிழ்த்துள்ளது.

குறிப்பாக கடந்த வருடம் மாவீரர் நாள் மற்றும் மே 18 ஆகிய நாட்களில் அரசாங்கம் வடகிழக்கு பல்கலைக்கழகங்களில் கண்காணிப்பை அதிகரித்திருந்ததோடு பொதுவாகவே பல்கலைக்கழக சூழலிலும் பல்கலைக்கழகத்தினுள்ளும் புலனாய்வாளர்களை உலவ விட்டுள்ளது. கடந்த வருடம் மாவீரர் நாள் நிகழ்வுகள் அனுஷ்டிக்கபட்டதினை தொடர்ந்து 13 மாணவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள் 40 ற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு விசாரனை செய்யப்பட்டு அச்சுறுத்தப்பட்டார்கள். இம்முறையும் மே 18 நிகழ்வுகளிற்கு முன்னர் மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். எனினும் இம்முறை மாணவர்களும் விரிவுரையாளர்களும் ஒன்றாய் கரம்கோர்த்து மே 18 நிகழ்வுகளை நடத்தியிருந்தார்கள். கிழக்கு பல்கலைகழகத்தினை பொறுத்தவரை மாணவர் தலைவர்கள் தனிதனியாக பலமுறை இனம்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார்கள்.

பழ றிச்சர்ட் (முன்னால் ஒன்றிய செயலாளர்)
(பிரயோக விஞ்ஞான பீடம் - வவுனியா வளாகம்)

தென்பகுதி பல்கலைக்கழகங்களிலும் இதே போன்று அடக்குமுறைகள் தொடர்ச்சியாக நடக்கின்றன. அண்மையில் பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் கண்டி நகரில் வைத்து கடத்தப்பட்டு கடுமையாக அச்சுறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார். களனி பல்கலைக்கழக மாணவர் சில மாதங்களுக்கு முன் நள்ளிரவு வேளையில் தாக்கப்பட்டார். றுகுனு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர், கடத்தல் முயற்சியில் இருந்து அதிஷ்டவசமாக மயிரிழையில் காயங்களுடன் தப்பினார். சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தடைசெய்யப்பட்டதோடு 5 மாணவர்களிற்கு வகுப்புதடை விதிக்கப்பட்டுள்ளது. பேராதனை பல்கலையில் 27 மாணவர்கள் மீது வகுப்பு தடை விதிக்கப்பட்டதோடு மாணவர் ஒன்றியத்தினை தடை செய்யும் முயற்சிகளும் மேற்க்கொள்ளப்பட்டன. கடந்த வருடம் பொய் குற்றசாட்டின் பெயரில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்ப்பாட்டாளர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அதனை தொடர்ந்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி மேற்க்கொண்ட பேரணியை முன்னின்று நடத்திய இரு மாணவர்கள் திட்டமிட்ட விபத்தொன்றின் மூலம் படுகொலை செய்யப்பட்டார்கள். மேலும், பல வழிகளில் மாணவர் தலைவர்கள் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்பட்டு வருகின்றார்கள்.

மாணவர்களின் வீடுகளுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்புவது, பெற்றோர்களை அச்சுறுத்துவது, இனம்தெரியாத நபர்களை கொண்டு தாக்குதல் நடத்துவது, கடத்தி அச்சுறுத்துவது, கைது செய்து சிறையிலடைப்பது, கொலை செய்வது என்பன அண்மை காலமாக அரசாங்கம் மாணவர்களை அடக்கியாள கையாளும் வழிமுறைகளாகும். மேலும், மாணவர்களின் போராட்டங்களை முடக்குவதற்கு பகிடி வதையை அரசாங்கம் ஆயுதமாக பயன்படுத்துகின்றது. பகிடி வதை என்பது ஒரு பிற்போக்கான விடயம் என்பதில் மாற்று கருத்துக்கள் இல்லை. பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை நிறுத்திட மாணவர் ஒன்றியங்கள் செயலாற்றிட வேண்டும். சில பல்கலைக்கழகங்களில் மாணவர் ஒன்றியங்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளினால் பகிடி வதை பெருமளவில் குறைந்துள்ளது. மாணவர் ஒன்றியங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துவரும் வேளை அரசாங்கமோ, தனக்கு சார்பான மாணவர்களை கொண்டு மாணவர்களை கொண்டு பகிடிவதையை ஊக்குவித்து வருகின்றது. உண்மையில் அரசாங்கத்திற்கு பகிடிவதையை நிறுத்தும் நோக்கம் இல்லை. பகிடிவதையை நிறுத்துகின்றோம் என்ற பெயரில் பல்கலைக்கழகங்களில் போராட்டங்களில் முன்னனி வைக்கும் செயற்பாட்டாளர்களை அடக்கி ஆளும் ஆயுதமாக பகிடிவதை ஒழிப்பு சட்டங்களை பயன்படுத்துகின்றார்கள். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிக்கும் வேலையையே அரசாங்கம் செய்கின்றது.

இதற்கான காரணம் மிக தெளிவானதாகும். உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் சிறிலங்கா அரசிற்கு தொடர்ந்து கடன் வழங்க அரசின் செலவுகளை குறைக்க வேண்டும், வருமானத்தினை அதிகரிக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது. இந் நிபந்தனையை அரசாங்கம் நடைமுறைபடுத்தாவிட்டால் தொடர்ந்து கடன் கிடைக்காது. அதன் காரணமாக தான் அரசாங்கம் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்ததோடு கல்வியை விற்பனை பண்டமாக்கி வருமானம் ஈட்டவும் முயற்சிக்கின்றார்கள். இதற்கு எதிராக மாணவர்கள் தொடர்ச்சியாக போராடி வருகின்றார்கள். இவர்களுடன் விரிவுரையாளர்களும் போராட்டத்தில் குதித்துள்ளார்கள். இவ்வாறான போராட்டங்கள் அரசின் கல்வியை விற்கும் கொள்கைக்கு பெரும் இடைஞ்சலாகும்.

தனது திட்டத்திற்கு இடைஞ்சலான போராட்டங்களை அடக்கிட அரசாங்கம் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. போராட்டங்களை தடுக்கவும் போராட்டங்களிலிருந்து மாணவர்களை திசை திருப்பவும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ தலைமைத்துவ பயிற்சியை வழங்கும் திட்டத்தினை மேற்கொள்கிறது. அத்துடன் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் , பதிவாளர்களாக இராணுவ அதிகாரிகளை நியமித்து பல்கலைக்கழகத்திற்குள் அடிமைதனமான இராணுவ சூழலினை உருவாக்கியுள்ளது.

எனினும் யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி தனியார் மயமாக்கலிற்கு எதிராக போராட்டங்களை மேற்க்கொள்ளவில்லை. அவர்களது செயற்பாடுகள் இனஒடுக்குமுறையை சார்ந்தனவையாகும். தனியார் மயமாக்கலிற்கு எதிராக சகலரும் போராட வேண்டிய நிலை தற்போது ஏற்ப்பட்டுள்ளது. அனைவரும் இப்பிரச்சினையில் ஒன்றினைந்த போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள் அவ்வாறே செயற்படுகின்றார்கள். மாணவர்கள் அவ்வாறு செயற்படமுடியாமைக்கான பொறுப்பினை மாணவர் ஒன்றியங்களை அண்மைகாலம் வரை தன் கட்டுபாட்டில் வைத்திருந்த பேரினவாதிகளான ஜே.வி.பி னர் தான் பொறுப்பேற்க வேண்டும். வடகிழக்கு மாணவர்கள் பாரிய அவலங்களுக்கு முகம் கொடுத்த சந்தர்ப்பங்களில் தென்பகுதி மாணவர்கள் அவர்களுக்காக குரல் கொடுப்பதினை மார்க்சிய தத்துவங்களை திரிபுபடுத்தி கையாண்டு தடுத்து வந்தனர். தற்போது மீண்டும் தலையெடுக்க முடியாத வகையில் அவர்கள் ஓரம் கட்டப்பட்டுள்ள நிலையில் மாணவர்கள் ஒன்றினைந்து செயற்பட்டு மாபெரும் சக்தியாக, தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுக்கும் காலம் உதயமாகியுள்ளது. கடந்த கால தவறுகளை சகலரும் சுயவிமர்சனம் செய்துகொண்டு சேர்ந்து செயலாற்றுவதன் மூலம் சகல உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான போராட்ட சக்தியாக மாணவர்கள் எழுச்சியடைய வேண்டும். அதன் மூலமே அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் உடைத்தெறிந்து சமூகத்தினை முன்னோக்கி நகர்த்த முடியும்.

## யாழ் பல்கலைக்கழக போராட்டங்கள் - 01

இராயாகரன்
முன்னாள் செயற்குழு உறுப்பினர் (1987-1988)
யாழ்.பல்கழக மாணவர் அமைப்புக் குழு

# ஒடுங்கி, ஒதுங்கி வாழ்வதா மாணவர் இயல்பு!

இன்று போல் 1980 களில் தொடர்ச்சியான அடக்குமுறைகளை மாணவர்கள் எதிர் கொண்டனர். இதன் போது 1986ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், மனிதனாக வாழ்வதற்காக வீதிகளெங்கும் இறங்கிப் போராடினார்கள். அடக்குமுறையால் அடங்கி, ஒடுங்கி உறைந்து கிடந்த தமிழ் சமூகம், மாணவர் போராட்டத்துடன் தனக்கு விடுதலை கிடைக்கும் என்று நம்பியதால், தன்னையும் கூட இணைத்துக் கொண்டது.

இந்த வகையில் மாணவர்கள் போராட்டத்தினுள் முழுச் சமூகத்தினதும் கோரிக்கையை உள்ளடக்கும் அரசியல் கோரிக்கையுடன் போராடத் தொடங்கினர். "மக்களுக்கு எழுத்து, பேச்சு, கருத்து, பத்திரிகைச் சுதந்திரம் வேண்டும்" என்று கோரியதுடன் மக்களுக்கு விரும்பிய அரசியல் ஸ்தாபனங்களில் இருக்கவோ அரசியல் நடத்தவோ சுதந்திரம் வேண்டும்" என்று போராடினர். மனிதனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் எழுந்த மாணவர் போரராட்டம், இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தது. இதை மக்களுக்கு வழங்கினால் தாங்கள் "அரசியல் அநாதையாகிவிடுவோம்'' என்று கூறி துண்டுப்பிரசுரத்தை வெளியிட்ட தேசியவாதிகள், அத்தோடு நின்றுவிடாமல் மாணவர்கள் மீது அடக்குமுறைகளை ஏவினர்.

இக்காலத்தில் வெளியாகிய மற்றொரு மாணவர் துண்டுப்பிரசுரம் ஒன்றின் தலையங்கம் «நாம் பேசவேண்டும்! எழுத வேண்டும்!! வாழ வேண்டும்!!! அதற்காக நாம் போராடுகின்றோம்" என்றது. நாங்கள் மனிதனாக வாழ வேண்டும் என்றால், போராட வேண்டும். இது தான் மாணவர் இயல்பு.

நடந்த மாணவர்கள் போராட்டம் பற்றி சுட்டுக்கொல்லப்பட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர் ராஜனி திரணகம தனது "முறிந்த பனை" என்ற நூலில் ''தமது அயலவர் ஒருவர் திடீரெனக் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போனால் மக்கள் அது பற்றிப் பாராமுகமாயிருந்தனர். இவ்வாறு இருக்கத் தயாராயில்லாத சிலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாவர். .... பல்கலைக்கழக மாணவர்கள் ... விவகாரத்தின்போது, இத்தகைய சூழ்நிலைகளிலே, அவர்கள் துணிகரமாகச் செயற்பட்டார்கள். .... அது பெருமளவில் உற்சாகத்தைக் காட்டுகின்ற முற்போக்கு இயக்கமாயிருந்தது. ... இதன் தலைவர்கள் பலரும் சமூகத்தின் கீழ்மட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான சாதாரண பெண்களும், அவசியமானதும் மூத்தவர்கள் செய்வதற்குப் பின்வாங்கியதுமான ஒன்றைச் செய்வதில், அரியதொருதுணிவைக் காட்டினார்கள்.'' என்று இந்தப் போராட்டம் குறித்த தனது குறிப்பில் எழுதியிருக்கின்றார். இன்று எது தேவை என்பதை, மாணவர்களுக்கும் இக் கூற்று எடுத்துக் காட்டுகின்றது.

இப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் ஒருவர் இரகசியமாக கடத்திச் செல்லப்பட்டு நீண்ட நாள் சித்திரவதைக்குள்ளாகிய நிலையில், அவர்களிடமிருந்து தப்பி பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையில் ".. நாம் தமிழீழத்துக்காகப் போராடிய காலகட்டங்களில் இப் பல்கலைக்கழகம் ஆரம்பமுதலே, வெகுஜனப் போராட்டம் என்பதை முதன்முதலில் பல்கலைக்கழகம் தான் வெளிப்படையாக முன்னெடுத்தது. தமிழீழத்தை ஆதரித்து பகிரங்கமாகப் போராடியது இப்பல்கலைக்கழகம் தான். அந்தவகையில் இப் பல்கலைக்கழகம் ஓர் பாரம்பரியத்தை முன்னெடுக்கின்ற வகையில், முன்னெடுக்கின்ற நிலையில், இப் பல்கலைக்கழகத்தில் நான் வந்த காலகட்டத்தில், பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஸ்ரீலங்கா அரசினால் மறுக்கப்பட்டிருந்து. இந்நிலையில் விடுதலைப் போராட்டத்துக்கு இப் பல்கலைக்கழகம் முழுமையான ஆதரவையும் முழுமையான பங்களிப்பையும் செலுத்திக் கொண்டிருந்தது. 84ம் ஆண்டுக்கு முன்பு ... (தமிழீழ அரசியலுக்கு) ஓர் கோட்டையாகவே இப் பல்கலைக்கழகம் விளங்கியது. அதற்குப் பிற்பட்ட காலங்களில் இப் பல்கலைக்கழகத்தில் ... (இயக்கங்களின்) அணுகுமுறைகள், மாணவர் மீதான தாக்குதல்கள் என்பது பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராகத் திரும்பிய போது, இங்கு நாம் அவர்களுக்கு எதிராகப் போராட வேண்டிய ஒரு சூழ்நிலை எழுந்தது. அதற்குப் பிற்பட்ட காலத்தில் ஸ்ரீலங்கா அரசினால் பறிக்கப்பட்டிருந்த பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் தமிழீழத்தில் ...(இயக்கங்களால்) பறிக்கப்பட்டது. அதாவது 85ம் ஆண்டு (இயக்க) .. அழிப்புக்குப் பிற்பாடு முற்றுமுழுதாக தமிழ் ஈழத்தில் இருந்த கருத்துச்சுதந்திரம் பத்திரிகைச்சுதந்திரம் முற்றாகவே அழிக்கப்பட்டது. ஒரு மாணவன் அல்லது ஒரு சமூகத்தில் உள்ள மனிதன் எந்தவொரு கருத்தையும் பகிரங்கமாகக் கூற முடியாத ஒரு நிலைமை உருவானது. இதைத் தமிழீழத்துக்காகப் போராடுகின்றோம், தமிழீழத்தில் உள்ள மக்களுடைய சுதந்திரத்துக்காக போராடுகின்றோம் என்று கூறிக்கொண்டு, இந்த மக்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்ட நிலைமையில் நடந்தது." இன்று சுய உணர்வை இழந்து சுதந்திர உணர்வுகளை இழந்து நிற்கும் வரலாற்றுத் தொடர்ச்சிக்கான காரணி இது தான்.
மக்களும் மாணவர்களும் அன்று இரண்டுவிதமான கடும் ஒடுக்குமுறைகளுக்குள், முரண்பட்ட அரசியல் சூழலுக்குள் நின்று போராடினார்கள். தங்கள் சுதந்திரத்துக்காக, தங்கள் சமூகத்தின் உயிர் மூச்சுக்காகப் போராடினார்கள். அடக்குமுறையைக் கண்டு அடங்கி ஒடுங்கிக் கிடக்கவில்லை. தானும் தன்பாடும் என்று ஒதுங்கிக் கிடக்கவில்லை.

இதே காலத்தில் வெளியான மற்றொரு துண்டுப்பிரசுரத்தின் தலையங்கம் "றாக்கிங் என்பது பல்கலைக்கழக மாணவர்களின் ஒரு பண்பாட்டு அம்சமா!" என்று கேட்டு ராக்கிங்கிக்கு எதிரான ஒரு போராட்டத்தைக் கூட தொடங்கியது.

மரபான வலதுசாரிய கூறுகளைக் கடந்து இடதுசாரியப் பாரம்பரியம் கொண்ட முற்போக்குக் கூறாக மாணவர் போராட்டம் வளர்ச்சி பெற்றது. வெறும் மாணவர்கள் விவகாரங்களைக் கடந்து சமூகத்தின் பால் அக்கறை கொண்டதுடன், தன்னையும் இணைத்துக் கொண்டது. சமூகத்தை தன்னுடன் இணைத்துக் கொள்ள முனைந்தது. தனது போராட்டத்துக்கு சமூகத்தில் ஆதரவைக் கோரியும், சமூகத்தில் பல முனைகளில் நடந்த போராட்டங்களில் தன்னை இணைத்துக் கொள்ளும் ஒரு புதிய அரசியல் பாரம்பரியம், யாழ் பல்கலைக்கழகப் போராட்டத்தின் போது உருவானது.

எந்தளவுக்கு மாணவர்களும், மக்களும் போராட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட்டு அமைப்பாக்கப்படுகின்றரோ, அந்தளவுக்கு ஒடுக்குமுறைகளையும் எதிர்கொள்ளமுடியும். இதைத்தான் அன்று மாணவர் சமூகம் செய்ய முனைந்தது. இந்த அனுபவத்தை இன்று விரிவாக தெரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது. சமூகமும், மாணவர்களும் உயிர்ப்புள்ள சமூக உறவாக மாற இது உதவும்.

### தமிழ் மாணவர்களின் இன்றைய நிலை

இன்று இலங்கை வாழ் ஒடுக்கப்பட்ட மக்கள் மேலான பொது அடக்குமுறையும், தமிழ் சமூகம் மீதான மேலதிகமான இனவொடுக்குமுறையும் காணப்படுகின்றது. அதேநேரம் கடந்தகால அரசியல் தமிழ் மக்களை செயலற்ற நிலைக்குத் தள்ளியிருக்கின்றது. தமிழ் மக்கள் இன்றைய இந்தச் சூழல் உருவாகுவதற்கு, 2009 க்கு முந்தைய இரு ஒடுக்குமுறைகளும் காரணமாக இருந்திருக்கின்றது. மக்களின் சுயமான செயற்பாடுகள் அனைத்தும் அழிக்கப்பட்ட, அதன் நீட்சியாகவே இன்று தமிழ் சமூகம் நடைப்பிணமாகி இருக்கின்றது.

ஏன், எதற்கு என்று கேள்வி கேட்டு அதை மாற்ற முனையும் மாணவர் சமூகத்தின் பொது ஆற்றலை இது முடமாக்கியிருக்கின்றது. இலங்கையில் தமிழ் மாணவர்கள் செயலற்றுப் போய் இருக்கின்றனர். நாட்டின் பொதுவான நிகழ்வுகள் சார்ந்த சிங்கள மாணவர்களின் செயற்பாடுகள் கூட, தமிழ் மாணவர்கள் மத்தியில் இருப்பதில்லை. பல்கலைக்கழங்களில் கற்கின்ற தமிழ் மாணவர்கள், சிங்கள மாணவர்களில் இருந்து ஒதுங்கியும் வாழ்கின்றனர். அதேநேரம் விசேடமாக பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்கொண்டு வாழும் தமிழ் மாணவர்கள், அதை எதிர் கொள்வது கிடையாது. மாறாக ஒதுங்கியும், ஒடுங்கியும் தனிமைப்பட்டு வாழ்கின்றனர்.

தமிழ் மாணவர்கள் மேலான பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்கொள்ள, சிங்கள மாணவர்களுடன் இணைந்து நிற்பதன் மூலம் அதை எதிர்கொள்ள முடியும். பொதுவான விடையங்களில் தமிழ்-சிங்கள மாணவர்களின் ஒன்றிணைந்த பொதுச் செயற்பாடுகள் தான், குறிப்பான விடையங்களிலும் தோழமையுடன் பயணிக்க வைக்கும்.

இந்த வகையில் மாணவருக்கே உரிய துடிப்பை தமிழ் மாணவர்கள் மீளக் கட்டமைக்காத வரை, உருவாகும் சமூகம் என்பது நலிவுற்று அடங்கியொடுக்கிப் போகவே வைக்கும். இது சமூகத்தை மேலும் பலவீனமாக்கும். சுயாதீனமான, சுதந்திரமான மனித ஆற்றலை வளர்த்தெடுக்கவும், அதை மீளக் கட்டமைக்கவும் கடந்தகால மாணவர்களின் ஆற்றல் பற்றிய வரலாற்றுப் பார்வையையும், அனுபவங்களையும் உள்வாங்கிக் கொள்வது அவசியம்.

இலங்கையில் ஒடுக்கப்பட்ட அனைவருக்கும் மேலான பொது ஒடுக்குமுறையும், தமிழ் தேசம் சார்ந்து பேரினவாத ஒடுக்குமுறையையும் எதிர்கொள்ளும் தமிழ் மாணவர்கள், இன்று ஒடுங்கிக் கிடக்கும் வரலாற்றுக் காரணம் என்ன?

1.தமிழ் மக்கள் மேலும், மாணவ சமூகம் மீதும் தொடர்ச்சியாக கையாண்ட பேரினவாத ஒடுக்குமுறையும், இனவழிப்பும்

2.சுயாதீனமான சுதந்திரமான மாணவர் செயற்பாட்டை மறுத்து, தமிழ் தேசியம் சார்ந்து ஆயுதம் ஏந்தியவர்கள் கையாண்ட பொதுவான ஒடுக்குமுறை


3.சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்கள் மேலான இந்த இரட்டைச் சுமைக்கு எதிராக, குரல் கொடுத்து கரம் கொடுக்காமை

பொதுவான இந்த வரலாற்றுக் காரணங்களால் தமிழ் மாணவர்கள் ஒதுங்கியும், ஒடுங்கியும் தனிமைப்பட்டும், செயலற்றும் கிடக்கின்றனர். சமூகத்தையே இன்று முற்றாகச் செயலற்றதாக்கி இருக்கின்றது. எதையும் கேள்வி கேட்கவும், மாற்றவும் முனையும் மாணவருக்கே உரிய பண்பை மாணவர் சமூகம் இழந்து நிற்கின்றது. ஒடுங்கி ஒதுங்கி வாழ்கின்ற நிலையா, மாணவர்களின் இயல்பு!

இல்லையெனின், ஏன் இந்த நிலை இன்று? இதைக் கேள்விக்குள்ளாக்க வேண்டியுள்ளது. இதை மாற்றுவது எப்படி? தனித்து ஒடுங்கிக் கிடப்பதன் மூலம் இதை மாற்ற முடியாது. மாறாக தனித்து நின்று இதை எதிர்ப்பதன் மூலம், சுய அழிவுக்கு செல்ல முடியாது. மாறாக கூட்டாக செயற்படுவது அவசியம். அதை தனித்து தமிழ் மாணவர்களாக ஒதுங்கி செயற்படுவதன்

மூலம், தனிமைப்பட்டு ஒடுக்குமுறைக்குள் சிக்கி அழிவது தவிர்க்கப்பட வேண்டும்.மாணவர்கள் என்ற பொது அடையாளத்தைஉயர்த்தி,
அனைத்துக்குமாக ஒன்றிணைந்து போராடுவது அவசியம். இதன் மூலம் ஒரு சமுதாயத்தின் ஒட்டுமொத்த மக்களுக்காக, மாணவர்கள் சிந்திப்பது செயற்படுவது அவசியம்.

1980 களில் தொடங்கி 1990 வரையான யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்கள், தங்களது சுயாதீனத்தால் பல முரண்பட்ட சூழலை எப்படி எதிர்கொண்டு போராடியது என்பதை தமிழ் மாணவர்கள் இன்று தெரிந்து கொள்வது அவசியம். இது ஒடுங்கி வாழும் தன்மையில் இருந்து மீள்வதற்கு வழிகாட்டும்.





# இலவசக் கல்வியையும் கல்விச் சுதந்திரத்தையும் வென்றெடுப்போம்

கல்வி, அறிவை பெறும் செயற்பாடாகும். எமக்கு முன் இருந்த அனைத்து தலைமுறைகளும் பெற்றுக்கொண்ட அனுபவங்களே அறிவு எனப்படுகிறது. இந்த அனுபவங்கள் அதாவது அறிவு மாபெரும் கடல் போன்ற களஞ்சியமாகும். இந்த களஞ்சியம் மனிதகுலத்தின் மாபெரும் சொத்து. இதற்குள் தான் எம்முன்னோரின் அனுவங்கள் அனைத்தும் சேமிக்கப்பட்டிருக்கின்றன. நியுட்டன், ஐன்ஸ்டீன், எடிசன், லிங்கன், ஹெகல், பிளேட்டோ, ஔவையார், வள்ளுவர், மார்க்ஸ், சித்தார்த்தன், விவேகாநந்தர், சேகுவேரா, பாரதி, கமல், கலாம், பிரபாகரன் ஏன், குப்புசாமி, வீரகத்தி, ரவி, அகிலா, விஜி என எல்லோரினதும் அனுபவங்களும் அடங்கும். இந்த அனுபவங்களே எமக்கு அறிவாக கிடைக்கின்றன. இந்த அறிவை பெறுவதற்காகவே நாம் கற்கின்றோம்.

எல்லா உயிரினங்களும் பிறந்து, உணவுண்டு. வளர்ந்து, இறந்துவிட மனிதன் மட்டும் இடையில் வேறுபடுகின்றான். உலகை கட்டுபடுத்தி வாழ்கிறான். இவ்வாறு மனிதன் வேறுபட முன்னைய தலைமுறையின் அனுபவங்களை சேமித்து பயன்படுத்துவதே காரணம். ஆகவே மனிதன் தொடர்ந்து முன்னோக்கி செல்ல அறிவை பெற வேண்டும். கற்க வேண்டும். மறுபுறம் மனிதன் சூழலையும் சமூகத்தையும் வெற்றிகரமாக எதிர்க்கொண்டு வாழ இந்த அனுபவங்கள் அதாவது அறிவு குழந்தை பருவத்திலேயே வழங்ப்பட்டு தயார்படுத்தப்படல் வேண்டும். ஆரம்பத்தில் வேட்டையாடுதல் பின் போர் புரிதல் விவசாயம் செய்தல் என்று வளர்ந்து இன்று பரந்து விரிந்திருக்கின்றது அறிவின் தேவை.

உலகை வெற்றிகரமாக எதிர்க்கொண்டு அதில் தன்னை நிலைநிறுத்தி வாழ இந்த அனுபவம் தானாகவே சமூகத்தில் வழங்கப்பட்டது. இந்த அறிவானது பரந்து விரிவடைய விரிவடைய சமூகத்தினால் தானாகவே கிடைக்கப்பெற்ற அறிவை விட பிரத்தியேகமாகவும் விசேட ஏற்பாடுகளின் மூலமும் விசேடமானவர்களிடமிருந்து பெறவேண்டிய தேவை ஏற்ப்பட்டது. இதுவே பள்ளிக்கூடங்களையும் ஆசிரியர்களையும் உருவாக்கியது. இவ்வாறு கல்விசாலைகளில் வழங்கப்பட்ட அறிவு கல்வி எனப்பட்டது. ஆரம்பத்தில் அரச வம்சத்தினருக்கும், உயர்குலத்தினருக்குமே இந்த கல்வி கிடைக்கப்பெற்றது. போர்க் கல்வி தேவைக்கருதி அரசால் வழங்கப்பட்டது. தொழில் கல்வி குடும்பம் வழியே பரம்பரை பரம்பரையாக பரவி சாதிகளை தோற்றுவித்தது. பின் உயர் சாதியினர் கற்க பள்ளிக்கூடங்கள் அரசால் உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டன. பணம்படைத்தோர் கற்றனர்.

இவ்வாறு கல்வி பணம்படைத்தோருக்கும் குறிப்பிட்ட பிரிவினருக்கும் மட்டுபடுத்தபட்டிருந்த சூழலில் தான், ஒடுக்குமுறைகளும் வர்க்கபேதமும் சுரண்டலும் அடிமைத்தனமும் நிறைந்த சமூகமுறையை புரட்சி செய்து மாற்றி சமவுடமை சமூகமுறையை ருசியாவிலே நடைமுறைபடுத்திய லெனின், எமது முன்னோர்களின் அனுபவமான அறிவு அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்றும் அதனை பெறுவது அனைவரினதும் உரிமை என்றும் கூறி அதனை நடைமுறைக்கு கொண்டு வந்தார். எமது முன்னோர்களின் அனுபவமாகிய அறிவு களஞ்சியத்தினை பணத்திற்கு விற்கும் உரிமை யாருக்கும் இல்லை, அது அனைவருக்கும் இலவசமாக கிடைக்க வேண்டும், அதனை அரசே மக்களுக்கு இலவசமாக வழங்கவேண்டுமென புதுவிதி செய்த லெனின் ருசியாவிலே இலவச கல்வியை அறிமுகபடுத்தினார். சமவுடமை சமூகமுறை உருவாகி இலவச கல்வி அறிமுகபடுத்தப்பட முன் 20மூ ற்கும் குறைவான எழுத்தறிவை கொண்டிருந்த ருசியா தேசம் மிக குறுகிய காலத்திலேயே விண்வெளிக்கு மனிதனை அனுப்புமளவிற்கு வளர்ச்சியடைந்தது.

இந்த வளர்ச்சி ஏற்படுத்திய தாக்கம் எம்போன்ற காலனித்துவ நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் தாக்கம் செலுத்தவே அந்நாடுகளில் முளைவிட்டிருந்த சோசலிசவாதிகளினாலும், அவர்களுக்கு போட்டியாக உருவெடுத்திருந்த மிதவாதிகளினாலும் அனைவருக்கும் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்பது கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு போராட்ங்கள் முன்னெடுக்கப்பட்டன. சிறிலங்காவில் இலவசகல்விக்காக முதன்முதலில் தீவிரமாக குரல் கொடுத்தவர்கள் அப்போதைய சமசமாஜ கட்சியை சேர்ந்தவர்கள். இவர்களின் போராட்டம் வலுபெற்று அது மக்களிடமும் விழிப்புனர்வை ஏற்படுத்தவே, அப்போதைய கல்வி அமைச்சராகவிருந்த மிதவாதியான சி. டப்ள்யு. சி. கன்னங்கர இலசகல்விக்கான சட்டமூலத்தினை பாராளுமன்றில் சமர்பித்து இலவச கல்வியின் தந்தையானார். தாய் பத்து மாதம் சுமந்து பராமரித்து பிள்ளை பெற்று வளர்க்க ஆண் பெயரில் முதலெழுத்து இட்டு இலகுவாக தந்தையாகிவிடுவது போல்.

இவ்வாறு இலவசக்கல்வி சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டிருந்த வேளை கொழும்பு றோயல் கல்லூாயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அப்போதைய பிரதமரான ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த டீ.எஸ். சேனநாயக்க “இலவசகல்வி நடைமுறைக்கு வந்தால் எமது ஆதிகத்தை இழந்து விடுவோம்” என்று கூறினார். அவர் ”எமது” என்று குறிப்பிட்டது அவர் சார்ந்திருந்த சிறிலங்காவின் முதலாளி வர்க்கத்தினை ஆகும். இவ்வாறு டீ. எஸ் போன்ற பலரின் கடுமையான எதிர்ப்பிற்கு மத்தியிலும் அப்போதிருந்த இடதுசாரிகளின் தீர்கமான செயற்பாடுகளினால், சிறிலங்காவில் இலவச கல்வி நடைமுறைக்கு வந்தது. அன்றைய இடதுசாரிகள் கல்வியை பெறுவது அனைவரினதும் உரிமை அதனை யாரும் விற்கவோ சொந்தம் கொண்டாடவோ முடியாது என்றதன் அடிப்படையிலும் மனிதன் வாழ்க்கை சவாலை வெற்றிகொள்ள வாழ தயாராக அறிவை பெற வேண்டும் என்றதன் அடிப்படையிலும் சிறிலங்கா மக்களுக்கு இலவச கல்வியினை கிடைக்க செய்தனர். இதனை போன்று தான் இலவச மருத்துவம், குறைந்த கட்டணத்தில் போக்குவரத்து என்பனவும் நடைமுறைக்கு வந்தன. இந்த மூன்றின் காரணமாக தான் சிறிலங்கா அரசின் பெயரில் சோசலிசமும் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

ஆனால், இலவச கல்வி பயன்படுத்தபட்டதோ வேறு விதமாக தான். பொதுவாக ஓர் முதலாளிதுவ அரசோ அல்லது எம் போன்ற அரைமுதலாளித்துவ நாடுகளின் அரசோ தன் மக்களுக்கு கல்வியை வழங்குவதில் இரண்டு நோக்கங்கள் இரக்கும். முதலாவது நடைமுறையிலிருக்கும் பொருளாதார முறைக்கு தேவையான தொழிலாளர்களை உருவாக்கி கொள்ளல். இரண்டாவது நடைமுறைக்கு ஏற்றாற் போல் கல்வியூடாக கருத்தியலை பரப்பி மக்களை வழிபடுத்தல். விளங்கும்படி சொல்வதென்றால் நடைமுறையிலிருக்கும் சமூகமுறைமைக்கு தேவையான வகையில் மக்களை அடிமையாக்கி கொள்ளல். இதனை கல்வி திட்டத்தினை ஆழமாக ஆராய்ந்தோமானால், முழு கல்வி திட்டமும் இதற்கேற்றாற்போல் கவனமாக தயாரிக்கப்பட்டிருப்பதனை காணலாம். பொலிஸ், இராணுவம், நீதிமன்றம் போன்ற அடக்கமுறை கருவிகளால் அடக்கி ஆள்வதினை விட கருத்தியல் கருவிகளால் அடிமைபடுத்துவது இலகுவானதும் எதிர்ப்பில்லாததுமாகும்.

இதற்குள் எம் போன்ற அரைமுதலாளித்துவ நாடுகளின் கல்வி திட்டத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் செல்வாக்கும் தாக்கம் செலுத்தும். ஏகாதிபத்திய நாடுகளிற்கு தன் சுரண்டலை நடத்த ஏனைய நாடுகளின் பொருளாதார சுயாதீன தன்மையை வீழ்த்துவது அவசியமாகும். இதற்காகவே உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் செயற்படுத்தப்படுகின்றன. இன்றைய எமது கலவி முறையானது முழுமையாக மேற்குறித்த இருநிறுவனங்கள் மூலமே வழிநடத்தப்படுகின்றது. இவர்களின் ஆலோசனையின் பெயரிலேயே கலைத்துறையானது எமது கல்வி முறைமைக்குள்ளிருந்து படிபடியாக அகற்றப்பட்டு வருகின்றது. கலையானது நாட்டின் சுயாதீன

தொடர்ச்சி பக். 10 யில்

| ஆண்டு | 1977 | 1978 | 1979 | 1983 | 1984 | 1985 | 1990 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேசிய உற்பத்தி வருமானத்தில் கல்விக்கு ஒதுக்கபட்ட நிதியின் சதவீம் | 6.0 | 4.1 | 2.0 | 2.7 | 2.4 | 3.0 | 2.9 | 2.8 | 3.1 |
| ஆண்டு | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
| தேசிய உற்பத்தி வருமானத்தில் கல்விக்கு ஒதுக்கபட்ட நிதியின் சதவீம் | 2.8 | 2.6 | 2.5 | 2.6 | 2.6 | 2.4 | 2.0 | 2.3 | 2.2 |
| ஆண்டு | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
| தேசிய உற்பத்தி வருமானத்தில் கல்விக்கு ஒதுக்கபட்ட நிதியின் சதவீம் | 2.06 | 3.75 | 2.6 | 2.6 | 2.3 | 2.1 | 1.9 | 1.9 | 1.8 |

அட்டவனை 01- (மூலம்- மத்திய வங்கி அறிக்கை)

| ஆண்டு | 1985 | 2000 | 2005 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|---|
| பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்ற மாணவர்கள் | 43.7 | 49.66 | 55.88 | 59.48 | 61.27 | 62.5 |
| அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களின் சதவீதம் | 31.56 | 16.08 | 13 | 14.34 | 16.53 | 16 |

அட்டவனை 02- (மூலம்- பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் அறிக்கை

எதிர்பாராத நேரங்களில் தோன்றிடும் ஒரு சில தீப்பொறிகள் முழு உலகையும் உலுக்கிவிடும். யாதார்த்தங்களையும் எதிர்வுகூறல்களையும் தலைகீழாக மாற்றிவிடும். மாற்றங்கள் எதிரானதாகவோ சார்பானதாகவோ அமையலாம், ஆனால் அவற்றின் பின்னால் எல்லாம் பலமான தத்துவ கோட்பாடு இருக்கும். அந்த தத்துவ கோட்பாடுகள் தான் மாற்றங்களை மலர செய்தன. ஹிட்லர் ,ஐன்ஸ்டீன் வரை எல்லோருக்கும் பொருந்தும். பிரபாகரனுக்கும் பொருந்தும். தமிழக மாணவர்களுக்கும் பொருந்தும். தமிழ் நாட்டில் ஜெனீவா தீர்மானத்தை அடிப்படையாக கொண்டு அரங்கேறிய அத்தனை நடவடிக்கைகளையும் பின் தள்ளி தமிழக மாணவர்களின் போராட்டம் முன்னிலை பெற்றுள்ளது. மாணவர்களின் தன்னிலையான எழுச்சியும் போராட்டங்களும் எங்கு நடந்தாலும் தட்டி கழித்து செல்ல கூடியதல்ல அதனை சரியான திசை நோக்கி செல்வழி படுத்த வேண்டியது அவசியமானதாகும் . குறிப்பாக இதனை ஒடுக்கப்பட்ட இலங்கை தமிழர்கள் செய்ய தவறிட கூடாது. ஒடுக்கப்பட்ட மக்கள் சர்ாபாக இதனை முற்போக்கு சக்திகள் செய்திட வேண்டும். புரட்சியாளர் தோழர் லெனின் என்ன செய்ய என்ற தனது நூலில் இதனை பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்றால் எல்லோரையும், அவர் அவர் போக்கில் செங்கல் வைக்கவிட முடியாது. அப்படி நடந்தால் கட்டிடம் கட்டிடமாக உருவாகாது. அதற்கு சாரியான வரைபடம் தேவை ஒழுங்கு படுத்தல் தேவை. அவ்வாறு வைக்கப்படும் செங்கல் சரியாக வைக்கப்படுவதற்காக அளவுகோல் பிடிக்க வேண்டும். முற்போக்கு சக்திகள் அதனை செய்திட வேண்டும்.

### சீறிபாய வைத்த தீப்பொறி

1983 ம் ஆண்டு குட்டிமணி தங்கதுரை உட்பட 53 பேர் சிங்கள இராணுவத்தினால் வெலிகடை சிறையில் கொல்லப்பட்டதுடன் தொடர்ந்த தமிழின படுகொலை தமிழகத்தில் பெரும் எழுச்சியை உருவாக்கியது. அதன் பின் 30 வருடங்கள் கடந்த பிறகு தற்போது ஒரு எழுச்சியை தமிழகம் கண்டுள்ளது. உடனடி காரணம் 4 சனல் வெளியிட்ட பாலச்சந்திரனின் படுகொலை தொடர்பான நிழற்படங்களும் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டமும் தான் காரணம். லயோலா கல்லூரி மாணவர்கள் ஆரம்பித்த உண்ணாநிலை போராட்டம் முழு தமிழகத்திற்கும் பரவி சென்றது. மார்ச் மாதம் தமிழகத்தின் மெரினா கடற்கரையில் வரலாறு காணாத வகையில் மாணவர்கள் திரண்டனர். யுத்தக்குற்றத்திற்காக மகிந்த ராஜபக்ச தண்டிக்கபட வேண்டும் என்பதே மாணவர்களின் போராட்ட கோசம். மெரினா கடற்கரையில் தமிழகத்தின் உட்புற கிராம புற மாணவர்களும் நெடும் தொலைவில் இருந்து வந்து பங்கு பற்றி இருந்தார்கள். மனித நடமாட்டம் குறைந்த மெரீனா கடற்கரையின் சுட்டெரிக்கும் பகல் பொழுது முழுவதும் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது உறுதியுடன் ஆர்பாட்டம் நடத்திய மாணவர்கள் மாலையில் போராட்டம் நடத்திய இடத்தில் நிரம்பிய குப்பைகளை சுத்தம் செய்துவிட்டு சென்றமை போராட்டம் நடத்தியவர்கள் மாணவர்கள் தான் என்பதினை உறுதிபடுத்தியது.

### தடைகளை தாண்டி தொடரும் போராட்டம்

ஜெனீவா கூட்டம் முடிந்த கையோடு கல்யாண வீட்டில் பந்தியை பதம் பார்த்து முடித்தவர்கள் போல் மாணவர் போராட்டமும் நீர்த்து போகும் என்று சிலர் அரசியல் ஆய்வு என்ற பெயரில் ஆருடம் கூறினார்கள். ஜெனீவா மனித உரிமை கூட்டம் முடிந்த பின் மாணவர்கள் வழமை போல் கல்லூரிக்கு செல்ல ஆரம்பித்த போது பலர் அதனை நம்பிவிட்டனர். ஆனால் மாணவர் போராட்டம் தொடருகின்றது. தினமும் சாலை மறியல் செய்வதும் மெரீனாவில் ஆர்பாட்டம் செய்வதும் தான் போராட்டம் என்று கருதினால் மேற்சொன்ன ஆருடங்கள் உண்மை தான். ஆனால் இலக்கை அடைய வேண்டும் என்றால் மிக நீண்ட பொறுமையான செயற்பாடுகள் அவசியம். வெற்றி பெற சமூகத்தில் உறுதியான கருத்தியலை உருவாக்கிட வேண்டும். மாணவர்கள் அதனை ஒரளவிற்கேனும் உணர்ந்துள்ளதாகவே தெரிகிறது. போராட்டத்தினை மக்கள் மயபடுத்தும் நடவடிக்கைகளை அவர்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள். ஒரு பக்கம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாணவர் போராட்டங்களுக்கு சார்பாக செவிசாய்ப்பது போல் காட்டிக் கொண்டு மாணவர் தலைவர்களின் மீது அடக்குமுறையை ஆரம்பித்துள்ளார். தமிழ்நாட்டின் முதலாளிதுவ வாதிகளின் ஊடகங்கள் மாணவர் போராட்டங்கள் மீது அவதூறு பிரச்சாரங்களை நடத்துகின்றனர். இதனை எல்லாம் தாண்டி மாணவர்கள் முன்செல்ல வேண்டியுள்ளது. இணையவழி பிரச்சாரங்களையும் துண்டுபிரசுரங்கள் மூலம் மக்களை தெளிவுபடுத்தல் என்பன தொடாச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. இணையவழி வனொலி சேவை ஒன்றினையும் மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

### மாணவர் போராட்டங்களின் இயல்பு

மாணவர்கள் வர்க்க பிரிவில் ஒரு நிலைக்குத்து கூறாவார்கள். முதலாளிதுவ பொருளாதார முறை சமூகத்தை தொழிலாளர் வர்க்கம், விவசாயிகள், மத்திய தர வர்க்கம், முதலாளிவர்க்கம் என பிரமிட் முறையில் அடுக்கடுக்காக பிரித்து வைக்கும். இந்த பிரமிட் அடுக்குகளில் மாணவர்கள் சகல அடுக்குகளிலும் உள்ளடங்கும் நிலைகுத்து கூறாவார்கள். மாணவர்களின் இவ் வர்க்க இயல்பின் காரணமாக புரட்சியின் பிரதான பிரிவாக மாணவர்கள் முன்நிறுத்தப்படுவதில்லை. மாணவர்கள் புரட்சிகர சக்திகள் தான் ஆனால், புரட்சியை நடத்த கூடியவர்கள் அல்ல. புரட்சியுடன் நிற்க கூடியவர்கள். மாணவர்கள் மட்டும் நடத்தும் புரட்சிகர போராட்டங்கள் எப்போதும் புரட்சிகரமாக இருக்குமே ஒழிய அதன் இறுதி இலக்கை அடைந்ததாக இருக்காது. மாணவர்களின் புரட்சிகர போராட்டங்கள் இறுதி இலக்கை அடைய வேண்டுமெனில் புரட்சியின் முதனிலை வர்க்கமான உழைக்கும் வர்க்கத்தினை போராட்டகளத்திற்கு அழைத்துவரல் வேண்டும். இதனை செய்திட வேண்டுமாயின் மாணவர்கள் அமைப்பு ரீதியாக ஒன்றினைய வேண்டும். நிறுவனமயபடல் வேண்டும். அமைப்பு ரீதியாக ஒன்றினையும் மாணவர்களினால் தான் சரியான இலக்கையும் எதிரியையும் இனங்கண்டு சரியான கோட்பாடுகளுடன் போராட முடியும். இவ்வாறான போராட்டங்களே புரட்சியின் உண்மையான சக்திகளான மக்களை அரசியல் மயபடுத்தி களத்திற்கு அழைத்து வரும். போராட்ட களத்தில் குதித்துள்ள தமிழக மாணவர்களின் முன்னாலுள்ள மிக பெரிய சவால் அமைப்பு ரீதியாக ஒன்றினைவது. இதன் போது எழும் முரண்பாடுகளை கண்மூடிதனமாக தமிழன உணர்வை முன் வைத்தும் துரோகி பட்டங்களை வாரி வழங்கியும் இன்னும் பிறவற்றினை செய்தும் கடந்து செல்ல எத்தனிக்க கூடாது. முரண்பாடுகளை கோட்பாட்டு ரீதியாக அனுகி தீர்ப்பது மூலம் ஐக்கியத்தை நிலைநாட்டிட வேண்டும். அந்த சரியான கோட்பாட்டினை மாணவர்களுக்கு அவர்கள் நடத்தும் போராட்டம் கற்றுதரும்.



தமிழக
செ

### தன்னிச்சையான போராட்டமா?

தமிழக மானவர்களின் போராட்டம் தன்னிச்சையானது,அரசியல் சார்பற்றது என்ற அடையாளபடுத்தல்களுடன் நடத்தப்படுகின்றது. சிலர் அதனை நிருபிக்க கடும் சிரத்தை எடுத்த கொள்வதையும் காண கூடியாதாக உள்ளது. மரீனா கடற்கரையில் நடந்த போராட்டத்தில் மூக்கை நுழைக்க வந்த எந்த ஒரு அரசியல் கட்சி தலைவர்களையும் மாணவர்கள் அனுமதிக்கவில்லை . மேலும் மாணவர்களின் தன் கூட்டங்கள் போராட்டங்களில் அரசியல் பிரமுகர்களுக்கு உரையற்ற இடம் கொடுக்கவில்லை. மேற்சொன்னவற்றைக் கொண்டு மாணவர் போராட்டத்தினை தன்னெழுச்சியான போராட்டமாக அடையாளப்படுத்தும் அதே வேளை அவ்வாறு இனம் காண முயற்சிக்கின்றனர்.
வைகோ, சீமான் வந்து உரையாற்றினால் தான் போராட்டம் அரசியல் சார்பானது என்றால் உண்மையில் அரசியல் சார்பற்றது தான். ஆனால் எந்த போராட்டமும் அரசியலற்றதாகி விட முடியாது. அரசியல் கட்சி சாரததாகவே அமையவேண்டும். ஓட்டுகட்சிகள் எப்போதும் தன் நலன் சார்ந்தே செயற்படும். மக்கள் நலன் சார்ந்தல்ல. அந்த வகையில் அரசியல் மாற்றம் ஏற்படுத்தாமல் போராட்டத்தில் சாதகமான பலனை அடைந்திட முடியாது. அப்படி முடியுமானால் பல பத்தாண்டுகளாக தமிழக அரசியலில் கோலோச்சுபவர்கள் இதனை தீர்த்திருப்பார்கள். அரசியல் தளத்தில் மக்கள் விரோத சக்திகளுக்கு பதிலாக மக்கள் சக்திகளை இருத்துவதும் வெற்றிதான்.
தமிழக மாணவர்களிடத்தில் இத்தகைய எழுச்சியை உருவாக்கிட வேண்டும் என்பது விடுதலை புலிகள் உட்பட பலரின் ஆவாவாக இருந்தது. பலர் அத்தகைய முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டார்கள். பலர் இவ்வாறான எழுச்சிக்காக பல்வேறு காரணங்களிற்காக ஏங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் எதற்கும் மசியாத மாணவர்கள் இறுதியாக பாலசந்திரனின் படுகொலை தொடர்பான படங்கள் வெளியானதுடன் களத்தில் இறங்கினார்கள். சனல்-4 விற்கு இங்கு பெரிய இடமுள்ளது. மனித உரிமை கூட்டங்கள் நடைபெறுவதும் அதனை ஒட்டி யுத்த குற்றங்கள் தொடர்பான படங்கள் வெளிவருவதும் இவ்விரண்டு சம்பவங்கள் அல்ல. சனல்-4 விற்கு இத்தனை பிரச்சாரம் கொடுக்கப்படுவதன் நோக்கமே அதனை ஒட்டியதாக இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது தான். இங்கே விடுதலை புலிகள் உருவாக்கி விட்டிருந்த அழுத்த குழுக்களின் திறன்களை விடுதலைபுலிகளின் தோல்வியை கொண்டு இவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று புறந்தள்ளிட முடியாது. அவ்வாறான அழுத்தகுழுக்களின் செயற்பாடுகளும் சிலவற்றை நடத்தி கொண்டு தான் இருக்கின்றன. அத்தோடு தமிழக மாணவர்களின் போராட்டம் தமிழ் நாட்டில் முதல்வர்க்கு தொடர்ச்சியாக தலையிடியாக இருந்து வந்த ஈழ ஆதரவு போராட்டங்களை ஓரம் கட்டி உதவி செய்துள்ளன. இவை எல்லாம் கலந்த கலவையே தமிழக மாணவர்களின் எழுச்சி. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட திட்டமிடப்படாத எழுச்சியாகும்.

### ஜெனீவாவிற்கு பின் மாணவர் போராட்டம்

தற்போது தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கியுள்ள மாணவர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இலங்கையில் நடந்தது இனபடுகொலை என்பதினை இந்திய அரசு எற்றுக்கொள்ள வேண்டும் ,யுத்த குற்றத்திற்காக இலங்கை சனாதிபதி தண்டிக்கபடல் வேண்டும் இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் தனி நாட்டிற்கான வாக்கெடுப்பு நடத்துவதனை வலியுறுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை மாணவர்கள் வலியுருத்தியுள்ளனர். 30 வருடங்களாக பிரபாகரனிடம் போராட்டம் நடத்தும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு எல்லோரும் தன் வேலையை பார்த்து கொண்டு இருந்ததன் விளைவு தான் இது. இலங்கை தமிழர் களுக்கு தீர்வு கிடைப்பதில் தடையாக உள்ள காரணிகள் என்ன என்ற சிறு தெளிவு கூட இல்லாத தனமே இதுவாகும்.
இலங்கையில் நடந்தது இனபடுகொலை
இலங்கை இன பிரச்சனையின் ஆரம்பம் சுதேசிய முதலாளிகளின் எழுச்சியுடன் ஆரம்பமாகியது. ஆங்கிலேயர்கள் காலத்தில் தாமதமாக அவர்கள் எழுச்சியடைந்த போது நாட்டின் அதிகாரபரப்பிலும் சந்தையிலும் சிங்களவர் அல்லாத முதலாளிகள் ஆதிக்கம் செலுத்தினர். சந்தையை கைப்பற்ற முதலாளிகளிடம் நடந்த பொருளாதார போராட்டம் மெல்ல மெல்ல அரசியல் தளத்திற்கு மாறியது. அவ் இனத்தை சேர்ந்த முதலாளிகள் தன் இன மக்களை தேசியவாதத்தினை பரப்பி துணைக்கு அழைத்து கொள்ள ஆரம்பித்த நிமிடத்திலிருந்தே அரசியல் ஒடுக்குமுறை ஆரம்பமாகியது. அதிகாரத்தினை ஆங்கிலேயரிடம் இருந்து இலவசமாக பெற்றுக் கொண்ட சிங்கள தேசிய முதலாளி வர்க்கம் தமிழர்களை அடக்க ஆரம்பித்தது. இவ்வாறு படிப்படியாக வளர்ந்த ஒடுக்குமுறையின் உரிமையாளர்களாக இரு பெரும் சிங்கள கட்சிகளும் மாறி மாறி இருந்து வந்தன. இங்கு அதிகமாக தமிழர்களை ஒடுக்குபவர்கள் அதிகாரம் மிக்கவர்களாக வலம் வந்தனர். அந்த வகையில் அதன் ஆயுள் கால உரிமையாளர்களாக மகிந்த ராஜபக்க்ஷ தற்போது மாறியுள்ளார். அதற்கு அவர் கொடுத்த விலை முள்ளி வாய்க்கால்.
இனி அவ் அதிகாரத்தினை தக்க வைக்க அவர் போராடிட வேண்டும். அதற்கு தமிழர் பகுதியில் இருந்து எவ்வித போராட்டமும் உருவாகமால் பார்த்து கொள்ள வேண்டும். அது வரை வடக்கு கிழக்கில் இராணுவத்தினை நிலை நிறுத்தி வைத்திருப்பார். எல்லாம் அவர் நினைக்கும் வரை தமிழர்கள் போராட்டம் ஒன்றை நடத்த சிந்திக்க கூடிய சகல வாய்ப்புகளையும் மழுங்கடிக்கும் வரை அவரின் அடக்கு முறை தொடரும். இந்த வகையில் இந்திய அரசிற்கு இலங்கையில் நடந்தது என்ன என்பது நன்கு தெரியும் . இலங்கையை விட இந்தியாவிற்கு இதில் அனுபவம் அதிகம். ஆகவே இந்திய அதிகார வர்க்கம் வடகிழக்கில் போராட்டம் சூழ்நிலை உருவாவதை தற்போதைக்கு ஏற்றுகொள்ளாது . இந்திய அரசின் உரிமையாளர்களாக அதிகார முதலாளி வர்க்கம் இருக்கும் வரை இது சாத்தியமில்லை.

### மகிந்தவை தண்டிக்க முடியுமா?

இதற்கான விடை வரலாற்றில் நிறையவே இருக்கின்றது. ஏகாதிபத்தியம் தனக்கு தேவையான போது இவ்வாறானவர்களுக்கு ஆதரவு அளிப்பதும் தேவையான போது தண்டனை என்று முழக்கமிடுவதும் நிறையவே நடந்தேறியிருக்கின்றன. இரண்டுமே அந்தந்த நாடுகளில் ஏகாதிபத்தியத்தின் தலையீட்டை உறுதி செய்வதற்காக தான் நடக்குமே ஒழிய தர்மத்தினை நிலை நாட்ட அல்ல. இதனை மகிந்த நன்கு அறிவார். தமிழ் மக்கள் மீதான யுத்த குற்றம் விசாரிக்க படுமாயின் மகிந்த மட்டுமல்ல இன்னும் பலர் குற்றவாளிகள் ஆவார்கள். இந்தியாவும் தான். இறுதியுத்ததில் மகிந்தவிற்கு துணையாக நின்றவர்களும் இதில் அடங்குவார்கள். முள்ளிவாய்காலில் நடந்தவற்றை எல்லோரையும் விட அமெரிக்கா நன்கு அறியும். செய்மதிகளின் மூலம் நேரடியாக சகலதையும் கண்டது அமெரிக்கா தான். அப்போது கண்டும் காணாதது போல் இருந்ததும் இப்போது கண்ணீர் வடிப்பதும் ஒரே காரணத்திற்காக தான். ஆனால் தமிழ் மக்களின் நலன்களிற்காக அல்ல. இவர்களுக்கு கொடுக்க வேண்டியவற்றை கொடுத்து சாந்தப்படுத்தும் வழிமுறைகளை மகிந்த நன்கு அறிவார்.

### இந்தியா தனக்கு தானே பொருளாதார தடை விதித்து கொள்ளுமா?

இந்தியா அரசு இலங்கை மீது பொருளா-

நா தடை விதிக்க வேண்டுமாயின் இலங்கை இந்தியாவில் பெரிதும் தங்கியிருக்க வேண்டும். அல்லது இலங்கை மீது பொருளாதார தடை கொண்டு வர வேண்டுமாயின் உலக நாடுகள் ஒத்துழைக்க வேண்டும். முதல் விடயம் இலங்கையில் இந்திய நிறுவனங்களும் முதலீடுகளும் இல்லாத மாவட்டங்களே இல்லை. ஒருவேளை இந்திய பொருளாதார தடை கொண்டு வர வேண்டுமாயின் இலங்கையில் இருந்து தன் நிறுவனங்களை எல்லாம் விலக்கி கொள்ள நேரிடும். இந்திய வெளியேறினால் அந்த இடத்தினை நிரப்பிட பலர் போட்டி போட்டு கொண்டு வருவார்கள். இந்தியாவின் நிலை தன் கையாலேயே தன் கண்ணை

ஈழவிடுதலை போராட்ட அமைப்புக்களை பொறுத்த வரை தன் பிரச்சினையை தீர்க்க இந்தியாவினதும் தமிழ் நாட்டினதும் ஆதரவை கோரிய நின்றார்கள். இந்தியாவின் பிராந்திய நலன்களுடன் முரண்படாத தமிழீழமே புலிகளின் முன்மொழிவாக இருந்தது. அதாவது சிங்கள பேரினவாதத்திலிருந்து விடுதலையை பெற்று இந்திய காலடியில் அதனை சமர்ப்பது.




# மாணவர்களின் போராட்டம்

## ல்வழியும் செயல் வழியும்

குத்திக் கொண்டது போல் ஆகிவிடும். தவறி பேதும் இதனை இந்தியா செய்திடாது

### தனி நாட்டுக்கான வாய்ப்பேற்பு?

உலக நாடுகளில் நடந்த சகல விடுதலை போராட்டங்களிலும் அந்நாடுகளிற்கு அருகிலிருக்கும் ஆதிக்க அயல்நாடுகளே போராட்டங்களின் போக்கை தீர்மானித்தன. அந்த வகையில் ஈழ விடுதலை போராட்டத்தில் இந்திய தீர்மானகரமான சக்தி அதன் போக்கை தீர்மானிப்பது இந்தியா தான். இந்திய வெளியுறவு கொள்கை வகுப்பாளர்கள் எப்பொழுதும் இலங்கை அதன் எல்லைக்குள் இருப்பதாக கருதியே கொள்கைகளை வகுப்பார்கள். பலர் திருகோணமலையையும் இலங்கையில் சீனாவின் எழுச்சியையும் சுட்டிக்காட்டி தமிழீழம் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அவசியமானது என்று கூறுகின்றார்கள். ஆனால் தற்போதைய உலக வளர்ச்சியில் திருகோணமலை ஒரு பொருட்டே அல்ல. செய்மதி தொழில்நுட்பமும் நீண்ட தூர ஏவுகணைகளின் வளர்ச்சியும் அணுஆயுதங்களும் இவ்வாறான கேந்திர ஸ்தானங்களின் முக்கியத்துவத்தினை இல்லாது செய்து விட்டன. ஆகவே இந்தியாவிற்கு இலங்கை தன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் இந்தியாவின் எதிரிகள் இலங்கையில் இருப்பது இந்தியாவிற்கு பிரச்சினையே ஆகும். ஆகவே எதிரிகளின் இருப்பை தவிர்ப்பதற்காக இலங்கையில் இந்தியா இருக்க வேண்டும். 70 களில் இலங்கை இந்தியாவின் பிடியில் இருந்து நழுவி சென்ற வேளை இந்திய தமிழ் இயக்கங்களிற்கு ஆயுத பயிற்சி அளித்து போராளி குழுக்களை உருவாக்கியது. இலங்கைக்கு இராணுவத்தினை அனுப்பியது எல்லாம் தன்னை மீறி இலங்கையில் எதுவும் நடந்திட முடியாது என்ற செய்தியை வழங்கிட தான். தமிழ் போராளி குழுக்களை உருவாக்கி தனக்கு ஏற்றாற் போல் பயன்படுத்திய இந்தியாவிற்கு பிழைத்த இடம் விடுதலை புலிகள் தான். இந்தியா சுதந்திரம் பெற்ற போது 22 சுதேசங்களாக பிளவுறும் என்று கூறப்பட்டது. சொன்னாற் போல் கிழக்கு மேற்கு பாகிஸ்தான் என இரு பகுதிகள் பிரிந்து சென்றன. அப்போது ஜவகர்லால் நேரு ஒருவிடயத்தினை கூறினார். இந்தியா எமக்கு தேவை பிளவடைய விட மாட்டோம். சொன்னாற் போல் செய்தார். அதற்காக அவர்கள் உருவாக்கியது தான் இந்திய அரசியலமைப்பு சட்டம். அவ் அரசியலமைப்பே ஒன்றிணைக்கப்பட்ட பகுதிகளாக இருந்த இந்தியாவை ஒரு தேசமாக்கியது. இந்திய தேசத்தில் தேசிய இனங்களுக்கு மாநில அடிப்படையில் மொழிவாரி சுயாட்சி(?) வழங்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் இந்திய தேசத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் எந்த ஒரு விடையையும் இந்தியா தன் பிராந்தியத்தில் அனுமதிக்காது. இந்திய மாநில அதிகாரங்களுக்கு அதிகமான எந்த ஒரு அதிகார பகிர்வும் இந்தியாவின் சுயாட்சி(?) மாநிலங்களுக்கு முன் மாதிரியாய் அமைந்து இந்திய தேசத்திற்கு அச்சுறுத்தலாகிவிடும். ஆகவே இலங்கை தமிழர்களிற்கான அதிக பட்ச தீர்வாக இந்தியா அனுமதிப்பது மாகாணசபை முறைமையை தான். இந்திய உருவாக்கிய போராளி குழுக்களை இந்தியா ஏற்றுக்கொள்ள செய்த போது விடுதலை புலிகள் மறுத்து இந்திய பிடியில் இருந்து நழுவி சென்றார்கள். அன்று தொடக்கம் இந்தியா விடுதலை புலிகளை அழிப்பதிலேயே குறியாக நின்றது. இந்தியாவின் இந்த நிலைப்பாட்டினை மீறி அமெரிக்காவினால் கூட தன் இலங்கையில் தன் நலன்களை உறுதி செய்திட முடியாது. இந்தியாவின் இந்த நிலைபாடு தான் உலக நாடுகள் விடுதலை புலிகளை போட்டி போட்டு கொண்டு தடை செய்ய காரணம். நோர்வே மட்டும் அதில் விதிவிலக்காக்கப்பட்டது காரணம் விடுதலை புலிகளுடனான தொடர்பை பேண ஒரு தூதர் தேவை. ஆகவே இந்தியா தமிழீழத்தினை ஆதரிக்கும் என்று கனவு காணக் கூட முடியாது. அப்படி ஆதரிக்குமாயின் அது இந்தியாவில் உள் நாட்டு குழப்பங்களை தீவிரமாக்கி விடும்.

### மாணவர் போராட்டம் இந்தியாவில் ஏற்படுத்தும் தாக்கம்

இந்தியாவை பொறுத்தவரை தமிழக மாணவர்களின் எழுச்சி இது வரை சாதகமாகவே உள்ளதுடன் எச்சரிக்கையையும் வழங்கியுள்ளது. ஜெனீவாவில் அமெரிக்க கொண்டு வந்த தீர்மானத்தினை இந்திய எதிர்த்திருந்தாலும் தீர்மானம் நிறைவேறியிருக்கும். அப்படி நிகழ்ந்திருக்குமாயின் தீர்மானங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அமெரிக்காவை சென்றடைந்திருக்கும். இந்தியா பார்வையாளனாக இருக்க அமெரிக்கா இலங்கையில் தலையீட்டை அதிகரித்திருக்கும். இதனை ஆதரித்து வாக்களித்ததின் மூலம் இந்தியா தவிர்த்து கொண்டதுடன் அந்த அதிகாரத்தினையும் இந்தியா பெற்றுக்கொண்டது. கடந்த முறை எதிர்த்த இந்தியா இம்முறை ஆதரித்தமையை தமிழக எழுச்சியை காரணம் காட்டி நியாயம் கற்பித்து கொண்டது.

தமிழ் நாட்டு அரசாங்கமும் தீர்மானம் நிறைவேற்றி மாணவர்கள் சார்பாக இருப்பதாக காண்பித்து ஏனைய கட்சிகளை ஓரங்கட்டியுள்ளது. ஆனால் நீண்ட கால அடிப்படையில் தமிழ் நாட்டுக் கலவரமான நிலை இருப்பது இந்தியாவிற்கு சாதகமானதல்ல.

### மாணவர் போராட்டம் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கம்

ஈழவிடுதலை போராட்ட அமைப்புக்களை பொறுத்த வரை தன் பிரச்சினையை தீர்க்க இந்தியாவினதும் தமிழ் நாட்டினதும் ஆதரவை கோரிய நின்றார்கள். இந்தியாவின் பிராந்திய நலன்களுடன் முரண்படாத தமிழீழமே புலிகளின் முன்மொழிவாக இருந்தது. அதாவது சிங்கள பேரினவாதத்திலிருந்து விடுதலையை பெற்று இந்திய காலடியில் அதனை சமர்ப்பது. ஆனால் தமிழீழம் இந்தியாவின் பிராந்திய நலன் அல்ல. என்ன தான் இலங்கையில் சீனாவின் முதலீடுகள் அதிகரித்தாலும் இந்தியா இராணுவத்தினை அனுப்பி இலங்கையை தன் கட்டுப்பாட்டுக் கொண்டு வருமே ஒழிய ஒரு போதும் தமிழீழத்தினை உருவாக்கிட போவதில்லை. இங்கு மீண்டுமொரு முறை இந்திய இராணுவம் இலங்கை வரும் வாய்ப்பை யாரும் மறுப்பார்கள் ஆயின் அது உலக நடப்பை விளங்கி கொள்ளாமையே ஆகும். அப்படி ஒரு நிலை வந்தால் சீனா உதவிக்கு வரும் என்பவர்கள் அண்மைகால அமெரிக்காவின் இராணுவ தலையீட்டிற்கு எதிராக அது நடந்தது என்பதினை அவதானிக்கவும். சீனா தன் ஈடுபாடுகளை சந்தேகிக்காமல் செய்து கொண்டு தான் இருக்கிறது. யுத்தம் செய்து தன் பொருளாதாரத்தினை தேவையில்லாது சிதைத்து கொள்ள மாட்டார்கள். இப்படியான நிலையில் இன்னும் தமிழர் தரப்பு இந்தியாவை கெஞ்சி கொண்டிருப்பதினை செய்கிறது. இலங்கையில் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாயின் இந்திய என்ற பிராந்திய வல்லரசின் ஆதிக்கத்தினை உடைத்தெறிய வேண்டும். ஆனால் தமிழகத்தில் உருவெடும் தமிழீழ ஆதரவு போராட்டங்கள் இலங்கை தமிழ் மக்களை தொடர்ந்து நம்ப செய்து கழுத்தறுக்கும் வேலையையே செய்யும்.

இலங்கை சிங்கள மக்களிடம் தமிழக போராட்டங்கள் இரண்டு வகையான விளைவுகளை ஏற்படுத்தும். ஒன்று தமிழர்கள் தோற்கப்பட்டதை யாவரும் அறிவார்கள். அந்த குற்ற உணர்ச்சி சிங்கள மக்களிடம் தலைதூக்கும் போதெல்லாம் இனவாதம் ஊதி பெருப்பிக்கப்பட்டு குற்ற உணர்ச்சி மழுங்கடிக்கப்படும். தமிழக போராட்டங்கள் தொடர்ந்து சிங்கள மக்களை சென்றடைவதினால் அவர்களிடம் மேலெழும்பும் குற்ற உணர்ச்சி இனவாத ஆதிக்க போக்கை தொய்வடைய செய்யலாம். இதனை விட அதிகமாக நடப்பது தமிழக எழுச்சியை அச்சுறுத்தலாக காட்டி இனவாதத்தினை வளர்த்தெடுத்து தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையின் நியாயதனமாக தொடர்ந்து மகிந்தவை ஆளும் வர செய்திடும்.

தமிழக மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்?

இலங்கையில் ஆயுதபோராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் தமிழீழத்தினை வலியுறுத்தி தமிழக மாணவர்கள் போராடுவது வெறும் உணர்ச்சி கொந்தளிப்பினையும் உள்ளக்குளிர்வினையுமே தருமே ஒழிய வேறெதனையும் தர போவதில்லை. மாணவர்களை இதுகாறும் அனுசரிக்க அவர்கள் ஏந்தும் புலிக்கொடி அந்த போராட்டத்தினை அடக்குவதற்கான நியாயபூர்வமான காரணத்தினை வழங்கிடும். இவ்வாறான தமிழீழ கோரிக்கை இலங்கை தமிழர்களுக்கு எதிரானதாகவே அமையும். தமிழக மக்கள் என்பவர்கள் இந்தியாவின் 10 சதவீதமே ஒழிய முழு இந்தியா அல்ல. ஆகவே தமிழர் மீதான அடக்குமுறையையும் அதில் இந்திய மக்களின் பணம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதினையும் அம்பலப்படுத்தி இந்திய தமிழ் மக்களிற்கான தீர்வில் தடையாக நிற்பதற்கு எதிராகவும் இலங்கையில் தமிழர்களிற்கு நியாயமான தீர்வை ஏற்படுத்த நியாயமாக நேர்மையாக தலை நிற்க வலியுறுத்தியும் போராட வேண்டும். தமிழீழ கோரிக்கையையோ வேறு எந்த கோரிக்கையையோ முன் வைத்து போராட வேண்டியவர்கள் இலங்கை தமிழர்கள் தான். தமிழகம் அதற்கு துணைநிற்கவும் இந்தியா அதற்கு எதிராக இருப்பதற்கு எதிராக போராடவுமே முடியும். தமிழக மாணவர்களுக்கு தமிழக மக்களின் ஆதரவை பெற மட்டுமல்ல இந்திய மக்களின் ஆதரவை பெறவும் ஏனைய மாநில மாணவர்களுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. அனைவரையும் இணைக்க கூடிய வழி அனைத்து ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுப்பதுவே ஆகும். அனைவரையும் ஒடுக்கும் ஒடுக்குமுறையாளனை சரியாக இனம் காணல் வேண்டும். ஒடுக்குமுறையை இனம்கண்டு அதற்கெதிரான போராட்டத்தில் உழைக்கும் வர்க்கத்தினை திரட்டி கரம் கோர்க்க வேண்டும்.

### இலங்கை தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்?

தன் தெருவில் நிற்கும் திருடனை துரத்திட வேண்டும் என்றால் தெருக்காரன் ஒரு கல்லையேனும் விட்டெறியாமல் விரட்ட முடியாது. இலங்கை தமிழர் பிரச்சினைக்கு இந்திய மாணவர்களால் போராடி தீர்வை பெற்று தர முடியாது. இலங்கை தமிழர்கள் தான் களத்திலிருந்து போராட வேண்டும். இலங்கை தமிழர்கள் இந்தியாவிற்கு விளக்கம் கொடுத்து ஆதரவை பெற முனைவதற்கு பதிலாக இலங்கை சிங்களவர்களிடம் போராட்ட நியாயத்தினை கொண்டு சென்று ஆதரவை பெற்றால் மட்டுமே தீர்வை, இந்திய மேலாதிக்கத்தினை உடைத்தெறிந்து பெற முடியும். இதற்காக தென்னிலங்கை புரட்சிகர சக்திகளுடன் கொந்திராத்து அடிப்படையில் செயற்படுவதினை தவிர்த்து சகலரையும் நடைமுறையில் பிரதிநிதித்துவ படுத்தி நிற்கும் புரட்சிகர முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயற்படல் வேண்டும். அவ்வாறான முயற்சிகள் தான் தமிழக மாணவர்களின் போராட்டத்தினை அர்த்தமுள்ளதாக்கும்.




# அப்பாவின் மடல்

அன்பு கலந்த
அப்பா எழுதுவது..

வசதியாக நான் இருந்தது - என்ன
நீ கொண்டுவந்து சேர்த்த
முதியோர் இல்லம்..

பொறுப்பால் என்னை ஒப்படைத்துவிட்டு
கவனிக்க நீ வெளியேறிய போது
அன்பு நானும் உன்னை
பாலர் வகுப்பில் விட்டுவிட்டு - என்
முதுகுப் பின்னால் நீ அழுதுகத்த
கண்ணை மறைத்தபடி புறப்பட்ட காட்சி
ஞாபகத்தில் எழுந்தது..

முதல் சேர்க்க இந்த இல்லத்தை
தேடி திரிந்து நீ தேர்ந்தெடுத்ததை
அறிகையில் கூட - அன்று
உனக்காக நானும் பொருத்தமான
பள்ளி எதுவென்று ஓடி - அலைந்ததை
ஒப்பிட்டு செல்கின்றேன்.

இவ்வாறையில் ஒரு முறையேனும்
என்முகம் பார்க்க நீ வராமல்
போனாலும்
என் பாலர்பிரிவின் சாதத்தோடைய
ஒருக்கால் அனுப்ப வைப்பதற்காக - ஊர்
ஓடிச் அலைந்தது.

நீ விடுதியில் தங்கிப்படித்த காலத்தில்
உன்னைப் பார்க்க வெள்ளி என்று
ஆவல் இருந்தும் - உன்
படிப்பை நினைத்து தவிர்த்த நொடித்தன்
எதிர்வினையை இதுவென்று
இப்போது நான் அறிகின்றேன்.

இன்று வயதினிலே நீ
சிறுக சிறுக சேர்த்த
அனுபவத்தை - என்
முதுமைப் பருவத்தில்
சொத்தாக - எனக்கே
செலவு செய்கின்றாய்..
ஆனால்..
உனக்கும் எனக்கும் - ஒரு
வேறுபாடு..

நான் கற்றுக் கொடுத்தேன் உனக்கு..
வாழ்க்கை இதுதானென்று !
நீ கற்றுக் கொடுக்கிறாய் எனக்கு..
உறவுகள் இதுதானென்று !

எவரும் நினைவிலில்லை இங்கு
எனக்கு நானே சொந்தம் !

இப்படிக்கு
நீ வரும்நாளும் என்றும் வாராத
உன் அப்பா..

**மு. விஜயசுந்தர்**
**கல்வியாண்டு 2010/ 2011**
**சமூக விஞ்ஞான மொழிகள் பீடம்.**

'ஒரு மனிதன் தன்னிலும் மக்களிலும் சமூகத்திலும் இருக்கக்கூடிய சிறப்பான எல்லாவற்றையும் பற்றி அறியவும், நேசிக்கவும், சமாளிக்கவும் செய்வதற்காக, இயல்பின் தனது சிறுமைகளைத் திடீரென்று எடுத்துச் செல்லவும், வாழ்வின் சிரமங்களுடன் தலையிடவும் வேண்டும் இதுவே கல்வியின் உண்மையான நோக்கமாகக் கருதுகிறேன்'
— சிக்மண்ட் ஃப்ராய்ட் —




உயிரானவனே
கவிதைக் கதைத்த நட்களை
விட...
நாம் சண்டையிட்டு
மௌனமாகும்
நொடி பொழுதுகளில் நான்
முழுமையாக சுவாசிக்கிறேன்
உன்னை...

கவி
யாழ் பல்கலைக்கழகம்

வாழ்ந்த காலங்கள் மாறாமலிருக்க
வந்த துன்பங்கள் மறந்தாலும்
கைகள் சுமக்கும் சுமைப்பணியும்
வழிச் உழைப்பும், வழிச் இருப்பும்
உடலின்றி கிடைக்கும் சம்பளத்தில்
சமைக்க நாம் வரும் இந்த அதிர்ஷ்டம்

கடைகள் கூட கருகுகின்றன !
கண்விழித்த முதலைப்பார்த்து
சுத்தமான காற்றை சுவாசிக்க
முடிந்தாலும், சுதந்திரக் காற்றை
நேசிக்க கூட முடியவில்லையே ! என்ற

இந்தளவு வேர்த்து போன இதயத்தில்
வேலை இன்னும் கிடைக்கும்
யாரா ! யார் யாரோ !
இருந்தும் இலங்கைதேசம்
சாபத்திடம், கையேந்தி தொண்ட
தேசம் ஆனது

சொந்தங்கள் இல்லாவிட்டாலும்
சொந்தப் பிழைக்கும் சக்கரங்கள்
நினைவுச்சின்னமாய் இருப்பது
கையேந்தி கையேந்தி
நன்று மட்டுமே !

**சபாபதி மோகன்ராஜ்**
**கலைப்பிரிவு(அரசறிவியல் பிரிவு)**
**பேராதனை பல்கலைக்கழகம்**

# இலவச கல்வியையும் கல்வி சுதந்திரத்தையும்...

(மூன்றாம் பக்க தொடர்ச்சி)

தன்மையின் பிரதான கூறாகும். எம் நாட்டிற்கு அதிகளவு கடனை வழங்கும் நிறுவனங்கள் கடன் வழங்கும் போது அரசின் செலவுகளை குறைந்து வருமானத்தை அதிகரித்து காட்டுமாறு நிபந்தனை விதிக்கின்றன. இதன் பிரகாரம் இன்றை அரசாங்கம் இந்நிபந்தனையை நிறைவேற்ற கல்வியை தனியார் மயமாக்கி ஒரே கல்லில் இரண்டு மாங்காய் வீழ்த்த திட்டம் போட்டு செயற்படுகிறது. கல்வியை தனியார் மயமாக்கும் முயற்சி 1977 ஆம் ஆண்டு தாராளமய(திறந்த) பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு ஆரம்பமாகிவிட்டது. தாராளமயத்தின் இயல்பு தனியார் மயமாக்கல் தான். எனினும் மாணவர்களின் எதிர்ப்பு போராட்டம் நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சி, யுத்தம் என்பன தாராளமய பொருளாதாரத்தினை சரியாக நடைமுறைபடுத்தும் வாய்ப்பினை வழங்கியிராமையினால் கல்வி தனியார் மயமாக்கல் பெரிதாக இடம்பெறவில்லை. யுத்தம் முடிந்த பின் தாராளமய பொருளாதாரம் வேகமாக நடைமுறைபடுத்தப்படுவதோடு கல்வி தனியார் மயமாக்கப்படுவதும் வேகமாக இடம்பெறுகின்றன.

இதன் முதற்கட்டமாக கல்வியை வழங்கும் பொறுப்பிலிருந்து அரசு படிப்படியாக விலகிக்கொள்கிறது. உலகளாவில் நாட்டின் தேசிய உற்பத்தி வருமானத்தில் 6% கல்விக்காக ஒதுக்கபடல் வேண்டும் என்பது யுனெஸ்கோ நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அளவுபிரமாணமாகும். சிறிலங்காவும் இதனை ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டுள்ளது. எனினும் கடந்த வருடம் 1.8% தான் ஒதுக்கப்பட்டது இதுவரை ஒதுக்கப்பட்டதிலேயே இது தான் குறைந்த தொகையாகும்(அட்டவணை 01). இதன் காரணமாக பாடசாலை கல்வி வீழ்ச்சியடைந்து வருகின்றது தற்போது வரை நாட்டில் வாரத்திற்கு ஒரு பாடசாலை வீதம் மூடப்படுகிறது கடந்த ஆறு வருடங்களில் 350 ற்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பாடசாலைகள் மூடப்படல், பாடசாலைகள் செயலிழந்து செல்லுதல், பெற்றோர்களிடம் பணம் அறவிடல், ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படாமை, ஆசிரியர் நியமனம் குறைவடைதல், பாடசாலைக்கல்வி வீழ்ச்சியடைதல், தனியார் மேலதிக வகுப்பு கல்வி மேலும் மேலும் வளர்ச்சியடைதல் என மேலும் பிரச்சினைகளை உருவெடுத்துள்ளன. அரச அல்லது தனியார் துறையில் பணியாற்றுபவர்க்கு உயர்தரம் அல்லது சாதாரண தரம் அல்லது புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றும் பிள்ளைகள் இருப்பார்கள் ஆயின், இப்பிரச்சினைகளை அனுபவத்திலாடாக தெளிவாக கூறுவார்கள். அவர்களின் சம்பளத்தில் குறிப்பிடக்கூடிய அளவு மேலதிக வகுப்புகளின் கட்டணங்களுக்காகவும், பாடசாலைகளில் அடிக்கடி அறவிடப்படும் கட்டணங்களிற்காகவும் செலவாவதை கூறுவார்கள். இந்த செலவுகளை ஈடுசெய்ய முடியாத விவசாயிகள், மீனவர்கள், தினக் கூலி தொழிலாளர்கள், தோட்ட தொழிலாளர்கள் தம் பிள்ளைகளை, நிறைவு செய்திட முன்பே பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலக்கிட நேரிடும். கடந்த காலாண்டில் நிலவிய போட்டி தன்மையின் காரணமாக உயர்தர வகுப்பு மாணவர்களின் திறமை வேகமாக அதிகரித்தது (2007ம் ஆண்டு முதல்தடவையாக 3 ஏ சித்தி பெற்ற 138 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத நிலை வரை சென்றது) எனினும் அதற்கேற்ப பல்கலைக்கழக அனுமதி அதிகரிக்கப்படவில்லை. அட்டவணை இல.02 ஐ பார்க்கவும். இதற்கு பிரதானமான காரணமாக அமைவது கடந்த 35 வருடங்களாக கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்படுவதால் பல்கலைக்கழகங்கள் வளர்ச்சியடையாமல் ஓரேமட்டத்திலேயே நிற்கும் நிலையாகும்.

ஆகவே அரச இடைவெட்டும் நிதி ஒதுக்கீட்டினால் துண்டு விழும் தொகையினை சுமக்கவேண்டிய பொறுப்பு பெற்றோர்களை வந்தடைகிறது. இன்று பாடசாலைகளை கொண்டு நடத்துவது பெற்றோர்கள் தான். இவ்வாறு அரச கல்வி நிறுவனங்கள் தரம் குறைந்து வர, மறுபுறம் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது. இது இவ்வாறிருக்க கல்வி இன்று மாணவர்களை வதைக்கும் விடயமாகியுள்ளது. கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படுபவை அவர்களின் வாழ்க்கையுடன் தொடர்பற்றவையாகும். தொடர்பானவற்றை கற்பிக்க முயற்சிக்கப்படுவதும் இல்லை. மனித சமுதாயம் மாபெரும் அர்ப்பணிப்புகளுடன் பெற்ற அறிவை எதிரியாக கருதும் நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளமை எத்தனை பெரிய சீரழிவு. தன் வாழ்க்கையில் முடிவெடுக்கும் உரிமையை தாரைவார்க்க பழக்கப்படுத்துவது இக் கல்வி முறைகள் தான். விளையாட்டு துறையில் அல்லது கலைத்துறையில் அல்லது பிறதுறைகளில் ஈடுபாடு அதிகமாக இருப்பினும், அதிகமாக பணமீட்ட கூடிய துறையை தெரிவு செய்ய மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

கல்வியை தருவது நாம் எனில் அது எப்படி கிடைக்க வேண்டும், எதனை படிக்க வேண்டும், எந்த இடத்தில் படிக்க வேண்டும் என்பவற்றை தீர்மானிக்கும் உரிமை எமக்கிருக்க வேண்டும். கல்வி தொடர்பாக முடிவெடுக்கும் உரிமை எமக்கிருக்க வேண்டும். இன்று அந்த உரிமையும் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு எம்மிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கும் இலவச கல்வியையும் கல்வி சுதந்திரத்தையும் வென்றெடுக்க வேண்டியது எம்முன் இன்று எழுந்துள்ள சவாலாகும்.

# வர்த்தக மயமான வெசாக்

இன்றைய காலகட்டத்தில் ...தற்போதெடுத்தாலும் பணம் ...தான் மையம் என்ற வகையில் ...யாவரும் அலைந்து திரி...யும் நேரத்தில் அதற்காக ...டைமுக்கும் பகிர்ந்து ஓய்வை ...வழங்குவதாகவும் ஒரு மாமனிதனி...ன் பிறப்பு, இறப்பு, பரிநிர்வாணம் ...என்பவற்றை கொண்டாடும் முதமா...கவும் வெசாக் பண்டிகை கொண்டாட...படுகிறது. அந்த வகையில் இம்முறை ...நடந்து முடிந்த வெசாக் பண்டிகையில் ...கதைப்பதற்கு பல விடயங்கள் ...இருப்பதாக நினைக்கின்றேன்.

...ஆண்டாண்டு காலமாக புத்தபெருமானின் ...பிறப்பு, இறப்பு, பரிநிர்வாணத்தை ...கொண்டாடும் வகையில் வெளிச்ச ...கூடுகளை பற்ற வைப்பதினால் விமர்...சையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. ...தமது வடிவமைந்த வெவ்வேறு வடிவ...முடைய கூடுகளை தயாரித்து அவற்றிற்கு ...வெளிச்சம் ஏற்றும் ஒரு நிகழ்வாக இந் நிகழ்வு பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் இன்று பெரிதும் மாற்றத்திற்குட்பட்டு மனிதனின் ஓய்வு தேர்வி குறியாகி மனிதர்கள் பணத்தினை தேடும் இயந்திரங்களாக மாறியுள்ள காலகட்டத்தில் வெசாக் தினம் ஒரு விடுமுறையாக மாறியுள்ளது. அத்துடன் இத்தினம் பணம் படைத்தோர் தமது பணத்தின் ஆதிக்கத்தினை வெளிக்காட்டுவதும் விடுமுறையை தமது இலாபத்திற்கு ஏற்றாற் போல் வர்த்தக பண்டமாக மாற்றிக்கொள்ளும் வர்த்தகர்களின் தினமாகவும் இன்று மாறும் பெற்றுள்ளது.

இன்று கூடுகள் முதல் வெளிச்ச கூடுகள், மின் குமிழ்கள் மற்றும் கொடிகள் அனைத்தும் பணத்தினை குவிக்கும் பண்டங்களாக மாறிவிட்டது. இன்றைய கல்வி முறையினால் ஓய்விலாதும், சமூக வலைத்தளங்களின் சிறைப்பட்டுமுள்ள மாணவர்களும் பொருளாதார சிக்கல்களினால் முழுநேர உழைப்பாளிகளாக, பணமீட்டும் இயந்திரங்களாக மாறிவிட்ட பெற்றோர்களும், அளவில்லாது கண்முன்னேயும் கடைகளிலுள்ளும் குவிக்கப்பட்டுள்ள வர்த்தக பொருட்களை வாங்கி வெசாக் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

அத்துடன் இக்காலகட்டத்தில் தானதர்மங்களில் ஈடுபடும் பழக்கமும் காணலாம். அந்த வகையில் வருடம் முழுவதும் மக்களை சுரண்டி இலாபம் பெற்ற வர்த்தகர்கள் தமது செயலிற்கு பிராயச்சித்தம் செய்யும் ஒரு விடயமாகவும், சிலர் தமது பணபலத்தினை வெளிகாட்டவும் நடாத்தும் தானசாலைகளை காணக்கூடியதாக இருக்கின்றது. இவற்றிற்கிடையில் ஆங்காங்கே உண்மையாகவே தானம் மேற்கொண்டு தமது மனதிற்கு மகிழ்ச்சியை தேடிக்கொள்ளும் வறுமையிலும் செம்மையாக வாழும் மனிதர்களையும் அரிதாகவேனும் காணக் கூடியதாக இருக்கின்றது. வெளிப்படையாக யாரும் இலவசத்தினை விரும்புகின்றோம், என்று ஒத்துக்கொள்ளாவிட்டாலும் பணக்காரர்கள் முதல் ஏழை வரை இப்போதைய சமூக அமைப்பின்படி இலவசத்தை விரும்புகின்றனர், என்பது வெளிப்படையே. நாம் பாவிக்கும் அதி ஆடம்பர தொலைபேசிகளில் இலவச அழைப்பு இலவச குறுஞ்செய்திகள், இலவச தரவிறக்கங்களை மாத்திரமின்றி ஏனையவற்றிலும் இலவசத்தினை விரும்பும் பணக்காரர்களையும் இவ்வகையான தானசாலைகளின் வரிசையில் நிற்பதினை காணக்கூடியதாக இருக்கின்றது. தாங்கள் நிகழ்த்தில் படாத சில பணக்காரர்கள் அதிநவீன வாகனங்களிலிருந்து இறங்கி ஏழைகளுடன் வரிசையில் நின்றும் இடிப்பட்டும் தானசாலைகளில் உணவுண்ண நிற்பது அவர்கள் ஏழைகள் படும் கஷ்டத்தினை உணரவைக்க இந்த விடுமுறை தினம் ஒரு விசேட தினமாக அமைகின்றது. இவை இவ்வாறு இருக்க இந்த தானசாலைகளை நடத்துவோர் தமது அரசியலில் செல்வாக்குகளை அதிகரித்து கொள்வதற்கு சில சில கண்காட்சி செயற்பாடுகளை செய்வதனையும் மறப்பதில்லை. அந்த வகையில் பெரும் புள்ளிகளை இத்தினத்தில் தமது தான சாலைகளை ஆரம்பித்து வைக்க அழைப்பு விடுத்து அவர்கள் கைகளாலேயே இவற்றை ஆரம்பித்து வைக்கின்றனர்.

இந்த தினத்தில் தான சாலைகளில் உணவுகள் தானமாக வழங்கப்பட்டாலும் அந்த தினத்திலும் தாங்கள் நிகழ்த்தில் படாத பணக்காரர்களின் சிறு பசியை தீர்க்க திறந்து வைக்கப்பட்டிருக்கும் சிற்றுண்டி சாலைகளையும் காணக்கூடியதாக உள்ளது.

இதன்படி எதிர்காலத்தில் இவ்வகையான தினங்கள் வர்த்தகர்களின் தினமாக மா... றிவரும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. தாண்டப்பட்ட இனவாதம், மதவாதங்களிடையில் இலாபம் பெறுவது என்றும் பணம் படைத்த வர்த்தகர்களும் முதலாளி வர்க்கமுமாகும். அதிகரித்து செல்லும் விலைவாசிகளினால் பாதிக்கப்படும் மக்கள் மேலும் மேலும் சுரண்டலுக்கு உட்படுகின்றனர். ஆகவே இவற்றை இனங்கண்டு இவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து இவற்றை மாற்றியமைக்க வேண்டியது மாணவர்களாகிய எமது கடமையாகும்.

[illegible]
[illegible]
[illegible]

# கொல்ல வரும் அணு உலைகள்

"நவீன உலகில் அணுசக்தி எதிர்ப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை..." இது 30 வருடங்களுக்கு மேலாக தமிழ்நாட்டை மாறி மாறி ஆட்சிசெய்து வரும் இருவரில் ஒருவரான கருணாநிதியின் மகள் கனிமொழி இந்திய நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரையில் குறிப்பிட்ட விடயம். அதிகரித்த சக்தி தேவையின் இடைவெளி ஏற்படுத்திய தடுமாற்றமாகவே அன்று இக் கூற்று கணக்கிடப்பட்டது. தொழிற்துறையின் அதிவேக வளர்ச்சி சக்தி தேவையை அதிகரித்துள்ளது. அதற்கேற்றாற் போல மின்னுற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

மின்சாரமானது, பெரிய டைனமோ ஒன்றை சுழல செய்வதன் மூலமே உற்பத்தி செய்யப்படுகிறது. டைனமோவை சுழல செய்ய டைனமோவில் பொருத்தப்பட்டிருக்கும் விசிறியை சுழல செய்ய வேண்டும். விசிறியை சுழற்ற கையாளப்படும் வழிமுறைக்கமைய மின்னுற்பத்தி முறை குறிக்கப்படுகிறது.

அதிகரித்து செல்லும் உலகின் சக்தி தேவையை பூர்த்தி செய்ய மாற்று வழிமுறை ஒன்று அவசியமானதாகும். அந்த மாற்று முறையாக அணுசக்தி அறிமுகப்படுத்தப்பட்டு பிரச்சாரபடுத்தப்படுகிறது.

ஒரு பொருளை சிறிய துணிக்கைகளா பிரிந்து செல்லும் போது பெறப்படும் மேலும் பிரிக்க முடியாத கண்ணுக்கு தெரியாத மிகச்சிறிய துணிக்கையே அணு எனப்படும். இந்த அணுவை டால்டன் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார் என்று குறிப்பிடப்படுகிறது. அணுவானது சூரியனை மையமாக கொண்டு கோள்கள் சுற்றி வரும் நம் ஞாயிற்று தொகுதியினை ஒத்த கண்ணுக்கு புலப்படாத அமைப்பை கொண்டது. அணுவினுள் சூரியனை போன்ற மையமாக அணுக்கரு காணப்படும். அணுக்கருவை சுற்றி குறித்த வட்ட பாதையில் இலத்திரன்கள் எனப்படும் துணிக்கைகள் நம் சூரியனை கோள்கள் வலம் வருவது போல் வலம் வந்துக்கொண்டிருக்கும். அணுக்கருவினுள் புரோத்திரன்கள், நியூத்திரன்கள் , மீயூத்திரன்கள் போன்ற துணிக்கைகள் காணப்படும். இப்படிப்பட்ட அணுவை எப்படியாவது இரண்டாக பிளந்து விடவேண்டும் என ஒருவர் பகீரத முயற்சியில் ஈடுப்பட்டார். இறுதியில் முயற்சியிலே வெற்றியும் பெற்றார். அவர் தான் பௌதிகவியல் விஞ்ஞானி ஐன்ஸ்டீன். அணுவை பிளக்க முடியும் என்றும், அவ்வாறு அணுக்கருவை பிளக்கும் போது பெரும் ஆற்றல்மிக்க பெரும் அழிவை ஏற்படுத்தக்கூடிய சக்தி வெளிவரும் என்றும் கண்டுபிடித்தார். ஒரு அணுக்கருவை பிளவடைய செய்தால் அவ் அணுக்கரு மேலும் மூன்று அணுக்கருக்களை பிளவடைய செய்யும் இச்செயற்பாடு ஒரு தொடராக நிகழ்ந்து பெரும் அளவிலான அழுத்தசக்தியையும் அதிகளவான வெப்பசக்தியையும் பாரதூரமான விளைவு...


அணு உலை கதிர்வீச்சு தாக்கத்திற்குள்ளான குழந்தைகள்

...களை உண்டுபண்ணும் கதிர்வீச்சையும் உருவாக்கும். அணுவை பிளவடைய செய்து வெளிவரும் அழுத்தசக்தியையும், வெப்பசக்தியையும்,கதிர்வீச்சையும் அழிவை ஏற்படுத்தும் ஆயுதமாக பயன்படுத்த உருவாக்கப்பட்டதே அணுகுண்டாகும்.

அணுபிளவை கொண்டும் சம உலையும் இடப்பட்ட பாரிய உலையினுள் நிகழ செய்து வெளிவரும் அழுத்தசக்தியை கட்டுபடுத்தி நகர்த்தி சிறிது சிறிதாக பயன்படுத்துவதன் மூலம் டைனமோவின் மின்விசிறியை சுழல செய்து மின்னுற்பத்தி செய்வதே அணுமின்னுற்பத்தி எனப்படும்.

உலகில் ஒரே ஒரு தடவை தான் அணுகுண்டு தாக்குதல் இடம்பெற்றது. இரண்டாம் உலகயுத்தத்தின் போது அமெரிக்க அதிகார வர்க்கத்தினால் ஜப்பான் நாட்டின் மீது நடத்தப்பட்டது. ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி நகரங்களில் அணுகுண்டு தாக்குதல் ஏற்படுத்திய அழிவுகள் உலகத்தையே திகிலடைய செய்தது. அதன் பின் பொருளாதார ஆதிக்கம் கொண்ட நாடுகள் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள அணுகுண்டுகளை தயாரிக்க தொடங்கின. ஆபத்தான அணு ஆயுத தயாரிப்புகளை கட்டுபடுத்த ஒப்பந்தங்கள் போடப்பட்டன.இடையே அணுசக்தியை பயன்படுத்தி மின்னுற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டது.

எல்லா அணுக்களும் பிளவடையும் போது மேற்குறிப்பிட்ட ஆற்றல் வெளிவருவதில்லை. சில குறிப்பிட்ட மூலகங்களின் அணுக்கள் தான் இப்படியான ஆற்றலை வெளிபடுத்தும். யுரேனியம், தோரியம் போன்ற மூலகங்களே இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.இப்படியான ஒரு அணுவுலை தான் தென்னிந்தியாவின் கூடங்குளத்திலே நிர்மாணிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. சரி அதனால் எமக்கென்ன? எமக்கு ஒரு நன்மையும் இல்லைத்தான். ஆனால் பெரும் ஆபத்து காத்திருக்கின்றது.

கூடங்குளம் அணுவுலைகள் சாதாரணமாகவே ஏற்படுத்தும் சுகாதார, சூழல் கேடுகளில் இருந்து எம்மால் தப்பிக்க முடியாது. கூடங்குளம் அணுவுலை தென்னிந்திய கரையோர பிரதேசத்தில் அமைந்துள்ளது. அணுவுலை அமைந்திருக்கும் பிரதேசத்தை சூழவுள்ள 1 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்திற்குள் அணுவுலை ஊழியர்களை தவிர யாரும் உள்நுழைய முடியாது. 5 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்திற்குள் யாரும் வசிக்க முடியாது. 18 கிலோமீற்றர் சுற்றுவட்டாரம் தொடர்ந்து கண்காணிக்கப்படும். காரணம், அணுவுலைகளிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சின் தாக்கமாகும். கூடங்குளம் அணுவுலை கடலோரத்தில் அமைந்திருக்கின்றது. ஆகவே, நிச்சயமாக கடற்பிரதேசமும் கதிர்வீச்சு தாக்கத்திற்குள்ளானதாகும்.கடல் வாழ் உயிரினங்களும் மனிதன் உட்பட சூழ உள்ள உயிரினங்களும் தாக்கத்திற்குள்ளாகும்.

# இன மத பேதமற்ற சமுதாயம்

இம் மனித சமுதாயத்திற்கும் மற்றும் இந்த உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளிற்கும் இறைவனால் அளிக்கப்பட்ட பரிசு இப் பூமிப்பந்து. இறைவனின் படைப்பிலே வாழும் மனிதர்களான நாம் ஒவ்வொரும் எமது வாழ்வைச் சிறப்பாக அமைத்து கொள்ள விரும்புகின்றோம். இன்று உலகில் பல்வேறு நாடுகளில் மக்கள் திரண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற போதும் அவர்கள் ஒவ்வொருவருக்கிடையேயும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் உயிர்வாழ்வதற்கு மனிதனும் இவ்வுலகில் உயிர்வாழ்வதற்கு பிறருடைய உதவிகளும் சேவைகளும் அவசியமாகின்றன. இவ்வாறான இம்மனித சமுதாயத்தில் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையிற் தோன்றியதே இனங்களும், மதங்களுமாகும். ஒவ்வொருவருடைய இனங்களும் மதங்களும் உயர்ந்த எண்ணங்களை உடையனவாகவே காணப்படுகின்றன. எனினும் இவ் இன, மத வேறுபாடுகளின் அடிப்படையில் தத்தமது இனங்கள் மற்றும் மதங்களே உயர்ந்தன என்று எண்ணித் தமக்குள் போட்டி போடுகின்றனர். இப்போட்டிகளே எதிர்காலத்திலும் பாரிய யுத்தங்களாக வடிவெடுக்கலாம்.

விஞ்ஞானம் அதி உச்சக்கட்ட வளர்ச்சியைக் கண்டு உயர்ந்துள்ளது எனினும் இக்காலத்தில் மக்களின் இன, மத பேதங்கள் மட்டும் மாறாதிருப்பது வியக்க வேண்டிய விடயமே. மனிதர்களாகிய நாம் இப்பேதங்களைப் பெரிதாக்கி மோதிக்கொண்டு நாமே எமது உயிர்களைப் பலிகொடுக்க முனைகின்றோம். உதாரணமாக எமது தாய்நாட்டில் கடந்த முப்பது வருடங்களாக இனச் சண்டை நிகழ்ந்தது இவ் யுத்தத்தில் எவ்வளவு உயிர்கள் பலியெடுக்கப்பட்டன என்பதை அனைவரும் சற்று சிந்திக்க வேண்டும். இவ் யுத்தம் காரணமாக எமது நாட்டின் சமூக, பொருளாதார, கல்வி நிலைமைகள் எந்தளவிற்குப் பின்தங்கியுள்ளது என்பதையும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். யுத்தம் நடந்து நாடு சீரழிந்த போதும் மக்கள் தம் இன, மத வெறியினை விடவில்லை. இவ் இன, மத பேதத்தால் நாம் சுவர்களைக் கண்டோம். இன்று உறவுகள், ஊர், உடைமைகள் என எல்லாவற்றையும் இழந்து எம் மக்கள் பிறரிடம் கையேந்தி நிற்கின்றனர்.

ஒருவன் உயிருக்குப் போராடும் நேரத்தில் குடிப்பதற்கு சிறிதளவு நீரேனும் கிடைக்காதா என ஏங்கும் நேரத்தில் அந்த நீரைக் கொடுப்பவன் வேறு இனத்தை அல்லது வேறு மதத்தைச் சேர்ந்தவன் எனின், அந் நீரைப் பருகாமல் இருக்க அவனால் முடியுமா? அந்த இறுதித் தருணத்தில் அவன் எதைப்பற்றியும் சிந்திக்காமல் பருகும் அவன் நீர் கொடுத்தவனைத் தெய்வமாகவே மதித்து வணங்குவான். இறக்கும் தருணத்தில் வேற்று இனத்தவனைத் தெய்வமாகவே மதித்து வணங்குவான். இறக்கும் தருணத்தில் வேற்று இனத்தவனைத் தெய்வமாக எண்ணும் இம் மனிதர்கள் வாழும் காலத்தில் அவனோடு உறவாட மறுப்பது ஏன்? இதுவே மனிதனின் விந்தை...

இவ்வுலகில் எண்ணற்ற உயிர்கள் வாழ்கின்றன. அவற்றுள் மனிதன் மட்டுமே ஆறறிவு படைத்தவனாக கொள்ளப்படுகின்றான். ஏனைய உயிர்கள் எவ்வித பேதமும் இன்றி வாழ்வதால் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றன. வாழும் நாட்களைப் பொருத்தமாக கழிக்கின்றன. ஆனால் சிந்திக்கத் தெரிந்தவனாகக் கொள்ளப்படும் இந்த மனிதன் மட்டும் இன, மத வெறியுடன் வாழும் காலத்தை நாசமாக்கிக் கொள்கிறான். பகுத்தறிவு இருந்தும் கீழ்த்தரமாகவே சிந்திக்கின்றான், செயற்படுகின்றான்.

நாம் எவ்வளவு தான் சொத்து சுகங்களோடு வாழ்ந்தாலும் பிறருடன் அன்பாக வாழாவிட்டால் அவ்வாழ்வில் எவ்வித சுகமும் இல்லை. இவ்வுலகில் மனிதர்களுக்கு இனங்கள் மதங்களை ஒன்றிணைத்து எல்லோரும் ஒன்றிணைந்து வாழ முன்வர வேண்டும். எந்தவொரு மனிதனின் குருதியாவது அவரது இனத்தையோ மதத்தையோ இனங்காண முடியாது. உயிருக்குப் போராடும் போது இன, மத பேதங்களைச் சிந்தித்துப் பயனில்லை.


இந்த வகையில் இலங்கை நாடாகிய எமது நாட்டை நோக்குகையில் இலங்கை அன்னை பெற்றெடுத்த செல்வங்களே நாம். நாம் அனைவரும் சகோதரர்களே. இச் சகோதர உறவில் ஏற்படும் விரிசல்களிற்குக் காரணமான இன, மத பேதத்தை விலக்கி ஒன்றாக வாழப் பழக வேண்டும். ஒரே மனையில் ஊற்றெடுத்து பாயும் ஊற்றுகளாக ஒன்றாகச் சங்கமிக்கும் வண்ணம் உறவாட வேண்டும். விஞ்ஞானத்தின் வளர்ச்சியைக் கண்டு மெய்சிலிர்த்து நிற்கும் நாம் மெய்யான உறவுகளை எண்ணி வியக்க வேண்டும். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பது பழமொழி அதற்கிணங்க நாம் ஒன்றுபட்டு இன, மத பேதமற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்கி ஒரு தாய் மக்களாய் வாழ்ந்து காட்டுவோம். அதுவே எங்கள் தாய் நாட்டினை முன்னேற செய்து எமது வாழ்க்கையையும் சுபீட்சமானதாக்கிடும்

லோ. குருபரன்
கல்வியாண்டு 2008/2009
புவிசார் விஞ்ஞான பீடம்
சப்ரகமுவ பல்கலைக்கழகம்



# 21 ஆம் நூற்றாண்டின் அறிவியலின் விடிவெள்ளி

## ஸ்டீபன் ஹாக்கிங்




| | |
|---|---|
| பிறந்த திகதி | 1972 ஜனவரி 08 |
| பிறந்த இடம் | ஒக்ஸ்போர்ட் |
| தேசியம் | பிரித்தானியர் |

வாழ்க்கை துணை
ஜேன் வைல்ட்(ஏன் 1965-1991,விவாகரத்து)
எலைன் மேசன்(ஏன் 1995-2006,விவாகரத்து)

பிள்ளைகள்
ராபர்ட் (1967), லூசி (1969), டிமோதி (1979)

துறைகள்
பொது சார்பியல்
குவாண்டம் ஈர்ப்பு

நூல்கள்
காலத்தின் ஒரு சுருக்க வரலாறு (A Brief History of Time)
கருங்குழிகள் மற்றும் குழந்தைப் பிரபஞ்சங்கள் (Black Holes and Baby Universes and Other Essays)
மாபெரும் வடிவமைப்பு (The Grand Design)

சில விருதுகள்
ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது (1978)
வோல்ஃப் பரிசு (1988)
இளவரசர் ஒஸ்ரியாஸ் விருது(1989)
கோப்லி பதக்கம் (2006)
ஜனாதிபதியின் சுதந்திர பதக்கம்
சிறப்பு அடிப்படை இயற்பியல் விருது

சாதனைகளுக்கு குறைகள் ஒரு குறைப்பாடே அல்ல என்பதற்கொரு உதாரணம் உலக விஞ்ஞான புருசர்களுள் இந்நூற்றாண்டின் ஆச்சர்ய புருசன் . இயற்பியலின் இணையில்லா மகா மேதை, ஸ்டீபன் ஹாக்கிங்ஸ், 21 ஆம் நூற்றாண்டில் உலகம் போற்றும் இயற்பியலின் மேதையான இவரால் பிறர் உதவியின்றி நடக்கவோ, படிக்கவோ, எழுதவோ முடியாது இவரது மொத்த நடமாட்டமும் ஒரு சிறிய சக்கர நாற்காலியிலேயே அடக்கம். ஆனாலும் இந்த மனிதரின் சிந்தனைகளோ பிரபஞ்சத்தையும் தாண்டி சிறகடிக்கின்றது. இப்போதைக்கு கலிலியோ கலிலி, நியூட்டன், ஐன்ஸ்டீன் போன்ற உலக மகா விஞ்ஞானிகளின் வரிசையில் இடம் பெறக்கூடிய தகுதியுள்ள ஒரே நபர் இவர் தான்.

1942 ஜனவரி 8 இல் பிரிட்டனில் பிறந்த இவர். பிறக்கும் போதே சாதாரண குழந்தைகளை விடவும் சற்று ஆரோக்கியமற்ற நிலையிலேயே பிறந்தார். அதன் காரணத்தை மருத்துவர்களால் சரிவரக் கண்டுபிடிக்க முடியவில்லை. சிறு வயதில் படிப்பில் கெட்டிக்காரனாகவும் எதையும் சிந்தித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றல் கொண்டவராகவும் விளங்கினார் என்று பின்னாட்களில் கற்பித்த ஆசிரியர்கள் கூறியிருக்கின்றனர். இவர் தனது உயர்கல்வியை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்த போது தனது உடல் படிப்படியாக தளர்வடைந்து வருவதை உணர்ந்தார். காரணமின்றி அடிக்கடி சரிந்து விழுந்தார். இவருடைய உடல் எங்கும் தசை மாதிரிகளை வெட்டி எடுத்துப் பரிசோதித்த மருத்துவர்களால் தெளிவான முடிவுக்கு வரவில்லை. ஆனாலும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு மேல் உயிர்வாழ முடியாது என்பதை மட்டுமே சொன்னார்கள். 'Myotrophic lateral sclerosis' எனும் குணப்படுத்த முடியாத நரம்பு நோயினால் பாதிக்கப்பட்ட இவர் சிறிது சிறிதாக கை, கால் முதலிய பாகங்களின் செயற்பாட்டையும் பேச்சையும் இழக்கத் தொடங்கினார்.

மரணப்படுக்கையில் தனது நாட்களை எண்ணிய ஸ்டீபனுக்கு வைத்தியசாலையில் தனது எதிர்க்கட்டிலிலிருந்த சிறுவனின் மரணம் பயத்திற்குப் பதிலாக தைரியத்தையே கொடுத்தது. உடல் தன் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும் மூளையும் சிந்தனையும் முழு வேகத்துடன் செயற்பாட்டில் இருந்ததை உணர்ந்தார். சக்கர நாற்காலியில் இருந்தபடியே பல்கலைக்கழகப் படிப்பை முடித்து பேராசிரியர் ஆனார். 1985 இல் அவரது உடல் நரம்புநோயால் முற்றாகச் செயலிழந்தது நம்பிக்கையிழக்காத ஸ்டீபன் வலது கண்ணை மட்டுமே அசைத்து எழுத்துக்களை அடையாளம் காட்டிப் பாடம் நடத்தியதுடன், வரலாற்றுத் திருப்புமுனையான புத்தகம் ஒன்றும் எழுதினார்.

ஸ்டீபனின் மாணவர்களான பிறையன்விட், டேவிட் மேசன் இருவரும் மூளை நரம்புகளைக் கணினி உதவியோடு 'Voice Synthesizer' என்ற கருவியுடன் இணைத்தனர். ஸ்டீபன் கூற நினைத்ததை அக்கருவி வார்த்தை வடிவில் வெளிப்படுத்தியது. அத்துடன் கலிபோர்னியாவைச் சேர்ந்த கணனி நிபுணர், ஸ்டீபனின் கண்ணசைவுக்கு இயங்கும் மென்பொருளைக் கண்டுபிடித்து சக்கர நாற்காலியில் பொருத்திக் கொடுக்கவே ஸ்டீபனின் அதிகம் சிந்தித்து நிறைய எழுதத் தொடங்கினார்.

இவர் எழுதிய அறிவியல் நூல்களான "A brief history of time", " The universe in a nutshell" ஆகிய இரண்டும் உலகம் முழுவதும் மிகப் பிரபலமாகி விற்பனையில் சாதனை படைத்தன. சாதாரண மக்களும் வாசித்துப் பயனடையும் வகையில் இலகுவான மொழியில் அறிவியல் சமன்பாடுகளைத் தவிர்த்து எழுதப்பட்ட இந்நூல்கள் பலரையும் கவர்ந்தன. இவரது முக்கியமான ஆய்வுத்துறையான அண்டவியல் (Cosmology) குவாண்டம் ஈர்ப்பு (Quantum Gravity), கருந்துளைகளுக்கும் வெப்ப இயக்கவியலுக்குமான தொடர்புகள் பற்றி தனது கட்டுரைகளில் உள்ளடக்கியிருந்தார். கருந்துளைகளிலிருந்து ஒளி உட்பட எதுவும் தப்பிக்க முடியாது என்ற இயற்பியல் கோட்பாட்டை கேள்விக்குள்ளாக்கியது ஹாக்கிங்கின் ஆய்வு. கருந் துளைகளிலிருந்து சில கதிர்வீச்சுகள் வெளியாகிறது (ஹாக்கிங் கதிர்வீச்சு) என்றார்.


இது பற்றி ஸ்டீபன் கூறுகையில் " இந்தப் பிரபஞ்சம் உருவாவதற்கு முன்பு பெரிய பிரமாண்டமான வெற்றிடமாகவே இருந்தது எனவே யாரும் வந்து புவியை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை. அதுவாகவே தன்னை உருவாக்கிக் கொண்டது இது முற்றிலும் இயற்பியல் சார்ந்ததே. சுருக்கமாகச் சொன்னால் இப்பிரபஞ்சம் சுயமாகவே உருவானது இதை உருவாக்கக் கடவுளுக்கு அவசியம் இல்லை. நமது பிரபஞ்சத்தின் அன்றைய நிலை, இன்றைய நிலை நாம் இந்த பிரபஞ்சத்தில் வாழ முடிந்தது என்ற அனைத்துக்குமே ஏதாவது ஒரு காரணம் உள்ளது ஏதுவுமே மர்மமில்லை எல்லாமே அறிவியல் சார்ந்தது" என்று கூறினார். இறுதியாகத் தனது புதிய புத்தகமான "The grand design" இல் பெரு வெடிப்புக் கொள்கை காரணமாக பூமியும் குடும்பமும் கோள்களும் உருவாகின. அறிவியல் கோட்பாடுகளைக் கடவுள் என்று கூறிக்கொள்ளலாமே தவிர எந்தக் கடவுளும் பிரபஞ்சத்திற்கு உரிமை கோர முடியாது என்று கூறியிருந்தார். தற்போதைக்குப் பிரபஞ்சத்தின் வரலாறு குறித்து உலக அளவில் குறித்து உலக அளவில் விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ள ஒரே முடிவு "Big bank theory" மட்டுமே. மிகப் பெரிய வெடிப்புப் பிரளயத்தைத் தொடர்ந்து இப்பிரபஞ்சம் உருவானதாக இக்கொள்கை கூறுகிறது. உலகத் தோற்றம் பற்றிய முழுக் கோட்பாடு என்பது மனித அறிவின் உச்சக்கட்ட சாதனையாகும். ஆனாலும் ஈர்ப்பு விதி எனும் விதியிருக்கும் போது பிரபஞ்சம் ஒன்றும் இல்லாதிருந்து தானே உருவாக முடியும். கடவுள் ஒருவர் உலக சிருஷ்டியின் பின்னணியில் இருந்தார் என்பதை மட்டும் தெளிவாக மறுக்கிறார் ஸ்டீபன். இந்த பிரபஞ்சம் உண்டானதில் கடவுளின் பங்கு இருக்கலாம் என்ற நியூட்டனின் கோட்பாட்டைக் கடுமையாக விமர்சனம் செய்கிறார் ஸ்டீபன்.

ஸ்டீபன் கூறிய மேலும் பல கருத்துக்கள் ஏனைய விஞ்ஞானிகளால் புரிந்து கொள்ள முடியாத புதிராகவே இருக்கின்றது புரிந்தவர்கள் கூட தலையே ஆராய்ந்தபடி இருக்கின்றது புரிந்தவர்கள் கூட தலையே ஆராய்ந்தபடி இருக்கின்றனர். 40 வருடங்களுக்கு மேலாக சக்கர நாற்காலியிலேயே வாழ்க்கை தொடருகின்ற போதும் அறிவியலில் அவரின் கருத்துக்களும் கண்டு பிடிப்புகளும் எல்லோரையும் மலைக்க வைக்கின்றன. இவர் அடிக்கடி சொல்லும் வார்த்தையும் இவருக்கு மிகவும் பொருத்தமான வார்த்தையும் ஒன்று மட்டும் தான் ஆகும்.


" எதை இழந்தீர்கள் என்பதல்ல
எது மிச்சம் இருக்கின்றது என்பதே முக்கியம்"
நிச்சயமாக அறிவியல் ஆர்வலர்களுக்கு ஸ்டீபன் ஹாக்கிங்ஸ் ஒரு அசாதாரணமாகவே இருக்கின்றார், இப்பார் என்பது மறைக்கவோ, மறுக்கவோ முடியாத பேருண்மை ஆகும்.

[illegible]
கல்வியாண்டு 2010/2011
பிரயோக விஞ்ஞான பீடம்
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

# சிங்கிஸ் ஐத்மாத்தவ்வின் முதல் ஆசிரியர்



[illegible]



[illegible]

(தொடரும்)




கடந்த வைகாசி மாதம் 17(மே 31) அன்று மாணவிகளை அச்சுறுத்தி பாலியல் தொந்தரவு கொடுத்து வரும் விரிவுரையாளரும் பொருளியல் துறைத்தலைவருமான கலாநிதி சி.இளங்குமரனை பதவி நீக்ககோரி யாழ்ப்பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதையும், கொடும்பாவி எரிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவதினை எதிர்த்து மருத்துவபீட மாணவர் செயற்குழு நடத்திய பேரணி



மாணவர் ஒன்றிய தலைவர் இனம் தெரியாத நபர்களினால் கடத்தி அச்சுறுத்தப் பட்டமையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் பேராதனை பல்கலை மாணவர்கள்



மாணவர் ஒன்றியம் மீதான தடை, மாணவர்கள் மீதான வகுப்பு தடை, நிர்வாகத்தின் தடை என்பவற்றை எதிர்த்து மூன்று மாத காலத்திற்கும் அதிகமாக தொடர் போராட்டம் நடத்தி வரும் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் போராட்ட காட்சிகள்.